கொங்குநாட்டு செங்கரும்பு

தென்றல்

ஆசிரியர் - கண்ணதாசன்

மலர் 2 || சென்னை 15—5—56 செவ்வாய்க்கிழமை || இதழ் 48

கம்பீரமான உருவம். மிடுக்கான பார்வை. எதையும் பொருளோடு கவனிக்கும் கூர்மை. அழகிய தோற்றம். பல அர்த்தங்களைப்பகுத்துவைக்கும் புன்னகை.மிகவும் எளிமையான பழக்க வழக்கங்கள். மகத்தான மனித சக்தியை மெய்ப்படுத்தும் மனக் கட்டுப்பாடு. இன்ப துன்பங்களை - மேடு பள்ளங்களை இலட்சியம் செய்யாத வாழ்வு. படித்தவர் - படித்துக் கொண்டிருப்பவர் - இன்னும் படிக்க ஆசைப்படுபவர்-இத்தனை அடைமொழிகளுக்கும் மொத்த உருவம் ஈரோடு தந்த செல்வம் ஈ. வே. கி. சம்பத்.

நாம் பழகுகிற நண்பர் ஒரு பாடப் புத்தகம் போலிருந்தால் நமக்கு அதிலே அளவுகடந்த மகிழ்ச்சி. இவரிடமிருந்து நிறையத் தெரிந்துகொள்ளலாமென்கிற ஆசை!—சம்பத் அப்படிப்பட்டவர். வீணுக்கு வார்த்தைகளை வெளியிடமாட்டார். இரத்தினச் சுருக்கமாயிருக்கும் அவர் எடுத்தியம்பும் எதுவும்! ஒவ்வொரு வார்த்தையிலும் அழுத்தம் நன்கு தெரிந்துதான் சொல்லுகிறோம் என்கிறஉறுதி. மறுத்து ஒருவர் சொல்ல முடியாத வகையில்தான் பேசுகிறோம் என்கிற தெளிந்த நம்பிக்கை. அதனால்தான் சம்பத் என்றாலே மாற்றாருக்கும் ஒரு மயக்கம். சம்பத்தின் பேச்சைப்பல எதிர்க்கட்சிக்காரர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். சம்பத் எங்கே பேசுகிறாரென்றாலும் அங்கே தவறாது வரும் கம்யூனிஸ்ட் நண்பர்களை நானறிவேன். மாற்றாரையும் பிணைக்கும் கவர்ச்சியினைப் பெற்றவர்கள், இயக்கத்தில்மிகச் சிலர். அவர்களில் சம்பத் ஒருவர்.

சம்பத்தின் மனக் கட்டுப்பாடு எவ்வளவு வலிவுடையது என்பதற்கு ஒரு உதாரணம். அவர் தினசரி சுமார் முப்பது வெண்புகைச் சுருட்டு உபயோகப்படுத்தும் பழக்கமுடையவராக இருந்தார். திடீரென்று ஒரு நாள் காலையில் இன்று முதல் புகை பிடிப்பதில்லை என்று தீர்மானித்தார். அவ்வளவுதான். அவர் அந்தப் பழக்கத்தை மறந்தேவிட்டார். புகைப்பழக்கம் கொண்டவர்கள் அதை விட முயன்று தோற்றவர்களைத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். சம்பத், அதிலே வெற்றி பெற்றார். என்னைப் பொறுத்தவரை இந்தக் கட்டுப்பாடு தீராத ஆச்சரியமாகவே தோன்றுகிறது. கழகத்தின் பொறுப்பான பதவிக்குத் தகுதியுடையவர்களில் சொல்வலர் சம்பத்தும் ஒருவர் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

ஓய்வு பலருக்குக் கிடைக்கிறது. அந்தப் பலரில் பெரும் பகுதியினர், இந்த ஓய்வில் என்ன செய்யலாம் என்ற சிந்தனையிலேயே ஓய்வைக் கழித்து விடுவார்கள். மீதமுள்ளோர், தாம் தாம் உலகம் என்ற எண்ணத்தில் தங்களுக்கான காரியத்தில்மட்டும் அக்கரை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் நமது சம்பத் எதிர்காலஅரசியலை முன் கூட்டியே எண்ணி நாளெல்லாம் படிப்பவர். படித்ததைச் சிந்தித்துப் பார்ப்பவர் - தன்னுடைய கருத்தை சந்தர்ப்பம் கிடைக்கும் போது வெளியிடுபவர். பகைப் புலத்தை நளினமான சொற்களால் தாக்குவதிலே அண்ணாவின் நேரடி வாரிசு சம்பத். வெண்கல மணி ஓசையென வெளிக் கிளம்பும் அவருடைய குரல் கேட்டு மாக்கிய வெல்லியின் ஆட்சிக் கலை தவிடு பொடியாகிறது; சாணக்கியம் நடுங்கிச் சாகிறது; வண்ணச் சால்வையை விரித்துப் போட்டுக் கொண்டு 'யார் அந்தக் கவர்னர்?' என்று மேடை அதிரக் கேட்பது கண்டு கிண்டி ராஜபவனமே கலங்கி விடுகிறது. "ஆச்சாரியாரே உமது கல்வித் திட்டத்தைக் காலடியிலே போட்டு மிதித்துத் துவைத்துத் தூக்கி எரிகிறது திராவிட சமுதாயம்" என்று அன்றொரு நாள்சென்னைக் கடற்கரையில், சிறையிலிருந்து வந்த போது கணை தொடுத்தாரே சம்பத், அந்தப் புண் இன்றும் ஆறியிருக்காது ஆச்சாரியாருக்கு!

பேச்சிலே உள்ள கண்டிப்பை அவருடைய நடைமுறை வாழ்க்கையிலும், கொள்கையைப் பின்பற்றுவதிலும் காண முடிகிறது.

ஒரு முறை, சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள ஒரு மன்றத்தார் சம்பத்தைப் பேச அழைத்திருந்தார்கள். சம்பத் ஒப்புக் கொண்டிருந்தார். கூட்டத்தன்று மாலை 4 மணிக்கே 'தென்றல்' அலுவலகத்திற்கு வந்துவிட்டார். ஆறு மணிக்கே இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடிவிட்டனர் மைதானத்தில். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள்வந்தார்கள். 'போகலாமா'—என்று சம்பத்திடம் கேட்டார்கள். "கூட்டத்திற்கா? வர இயலாது என்று சொல்லி விட்டுப்போகத்தான் வந்தேன்" என்றார் சம்பத்.

மன்றத்துக்காரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கூட்டம் ஆரம்பிக்க வேண்டிய நேரத்தில் பக்கத்திலே இருக்கிறார், ஆனால் வர இயலாது என்கிறாரே என்று பலர்திகைத்தார்கள். நான்கூடத்தான்!

சம்பத் மன்றச் செயலாளரைக் கூப்பிட்டார். "என்னை மன்றத்தின் சார்பாகத் தானே பேச அழைத்தீர்கள். ஆனால் சுவரொட்டியில் என்ன போட்டிருக்கிறீர்கள்? தோழர்...என்பவரைத் தேர்தலில் ஆதரித்துப் பேசுவதாக அல்லவா விளம்பரப்படுத்தியிருக்கிறீர்கள்! ஆகையினாலேதான் நான் பேச முடியாது என்கிறேன்."

"அறியாமல் நடந்த தவறு!" என்றார் மன்றச் செயலாளர்.

"தவறு தவறுதான்! நான் வர முடியாது!" என்று சொல்லி விட்டார் சம்பத். இத்தனைக்கும், 'தென்றல்' மாடியிலிருந்து பார்க்கிறார். கூட்டம் திரண்டிருப்பது தெரிகிறது. ஒலிபெருக்கியிலே "சம்பத் வந்து கொண்டிருக்கிறார்!" என்று யாரோ சொல்லுவது கேட்கிறது. ஆனாலும் மறுத்துவிட்டார். காரணம் அறிந்த மக்கள் சம்பத்தை வாழ்த்திய படியே கலைந்து சென்றார்கள்.

அத்தகைய சுய மரியாதைச் செல்வம் நமது மாநில மாநாட்டிலே 'இந்திய அரசியல் கொள்கைக் குழப்பங்கள்' என்ற தலைப்பில் கருத்து மழை பொழிய இருக்கிறார். மாற்றாரும் கேட்டுத் திருந்த வேண்டிய பாராட்டுச் சிறப்புச் சொற்பொழிவுகளில் இதுவும் ஒன்று.

'உனது நண்பன் யாரென்று சொல். அதிலிருந்து நீ யார் என்று சொல்லி விடுகிறேன்' என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. நமது நண்பர்களைப் பொறுத்துத்தான் நமது மதிப்பும். எனது நண்பர் சம்பத் என்று சொல்லிக் கொள்வதிலே எனக்குக் கிடைக்கிறது மகத்தான மதிப்பு.

சம்பத் - இயக்கத்திற்கோர் விளக்கு!

சம்பத்! நாட்டிற்கோர் செல்வம்!

சம்பத்! நமக்கோர் அறிவுப் பெட்டகம்!

வாழ்க சம்பத்!

—கண்ணதாசன்.

தன்னம்பிக்கை - நன்னம்பிக்கை !

மெ. சுந்தரம், பி. ஓ. எல்.

வாழ்க்கை வளமாவதே நம்பிக்கையினாலேதான். தனி மனிதன் வாழ்வோ அல்லது இயக்கங்களின் வாழ்வோ எதிர்காலத்தில் ஒளிவிட்டுச் சிறப்பதற்கு இந்த நம்பிக்கை மிக இன்றியமையாத ஒரு கருவி. கடந்த கால நிகழ்ச்சிகளைக் கணக்குப் பண்ணி ஐந்தொகை எடுத்துப் பார்க்கும்பொழுது மிச்சம் சில சமயங்களில் லாபமோ, இழப்போ வரலாம். அந்த நேரத்தில்-ஐந்தொகை பெருமூச்சோடு பேசும் அந்தச் சமயத்தில், அஞ்சல் என்று அபயக்குரல் அளித்து ஆறுதல் நல்குவது நம்பிக்கை. இது அந்த நேரத்தில் கைகொடுத்து உதவாவிட்டால்வாழ்க்கை வரண்ட பாலையாய்க் காட்சி நல்கிக் கை பிசைய வைக்கும். ஆதலால் இந்த நம்பிக்கை முனைநோக்கி நடக்க முற்படவேண்டும் இந்நானிலம்.

இம்முனை எங்கேயிருக்கிறதென்று தேடித் திரிந்தவர், பலப்பலர். ஏங்கி இளைத்தவர் பட்டியலில் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் உள்ளவர்கள் இருக்கிறார்கள். புலவர் முதற்கொண்டு போகம் நாடும் காமிவரை இம்முனை தேடி இடர்ப்பட்டதுண்டு. அரிய முயற்சியிலே ஈடுபட்டவர்களுக்கு உரிய பயன் கிடைப்பதற்கு வழி வகுத்துக் கொடுப்பது இந் நன்னம்பிக்கை முனை. வாடிச் சோர்ந்து வழியில் விழும்போது, 'இன்னுங் கொஞ்ச தூரந்தான். இதனைக் கடந்துவிட்டால் இன்னலைக் கடந்துவிடலாம். இன்பத்தை எய்திவிடலாம்' என்று உணர்ச்சி ஊட்டி உற்சாகமளிப்பது இந்த நம்பிக்கைதான். திக்குத் தெரியாத காட்டில் திகைக்கின்ற போதும், வழி தடுமாறிக் களைக்கின்றபோதும் வாழ்வளிப்பது, கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் குளிர் நிழலாய் அமைவது இந்நம்பிக்கை நண்பன்தான். வாஸ்கோட காமாவுக்கு உள்ளத்திலே உரமூட்டிச் செயலிலே வலிமை சேர்த்தது நன்னம்பிக்கை முனைதானே. ஆதலால் 'இனிமேல் நம்மால் என்ன முடியும்' என்ற இடுப்பொடிந்த பேச்சுக்காரரை எழச்செய்து, அவர்தம் கூனல் உள்ளத்தை நிமிர்த்திக் குறிக்கோள் கோபுரத்தை எட்டச் செய்வது இந் நம்பிக்கை ஏணிதான். வளர்ந்து கொண்டிருக்கும் இயக்கத்தின் தளர்ச்சி நீக்கி, வாழ்வளித்து வளர்ச்சிபெறச் செய்வது இந்தத் தன்னம்பிக்கைதான். நம்பிக்கை இல்லாமல் மேலே நடப்பது எவ்வாறு? உடலில் வன்மை இல்லாவிட்டாலும் உள்ளத்தில் வன்மை இருந்தாலாவது ஒரு காரியத்தை இயன்றவரை வெற்றிகரமாக முடிக்கலாம். இந்த உள்ள வன்மையைத்தான் நம்பிக்கை என்று உரைப்பார்கள்.

'உன்னை நீ நம்பு; தன்னம்பிக்கையோடிரு' என்றார் எமர்சன். இவர் இக்கூற்றைக் கூறக் காரணம் என்ன?

'காயமே இது பொய்யடா-காற்றடைத்த பையடா' என்பது போன்ற நிலையாமைத் தத்துவங்கள் நாட்டில் பரப்பப்பட்டன. இதனால் நெஞ்சு நெகிழ்ந்தனர் மக்கள். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்பன போன்ற 'நிலையாமைகள்' மக்கள் மனத்தில் நிலைத்து நின்றன. அத்தோடு மட்டுமல்ல, விழுதும் விடத் தொடங்கின. வாழையடி வாழையாய் வந்த இந்த வழக்கம், மக்கள் சமுதாயத்தை மலர்ச்சி இன்றிக் குன்ற வைத்தது. சமுதாயம் தேய்பிறையாயிற்று. ஆதலால், இந்தத் தொத்து நோயை எப்படியாவது அகற்றிவிட வேண்டும், அதன்பின் அழித்தே விட வேண்டும் என அறிஞர் பெருமக்கள் கருதுவாராயினர். அதன் எதிரொலிதான் எமர்சன் கூற்று.

"நீரில் குமிழி இளமை
நிறை செல்வம்"

"இன்றைக் கிருந்தாரை நாளைக்
கிருப்பரென் றெண்ணவோ
திடமில்லையே"

"காதற்ற ஊசியும் வாராது காண்
கடைவழிக்கே"

என்பன போன்ற மொழிகள் இலக்கியத்தில் இடம்பெறலாயின. இடைக்காலத்தில் என்ன, இடைச் சங்க காலத்திலே ஐயப்படத்தக்க இத்தகையதொரு கருத்து முகங் காட்டலாயிற்று.

"ஊழிற் பெருவலி
யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"

இதனைப் படித்துவிட்டு நாடி தளரும் நேரத்திலே நம்பிக்கை யூட்டியது அதே ஏட்டிலேயே பிறிதொரு இடம்.

"ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

இது நன்னம்பிக்கை முனையாய் விளங்கி, விசையொடிந்த தேகத்தில் எழுச்சி ஊட்டியது. இந்த இலக்கியத் திருப்புமுனை ஊக்கம் கொடுத்து ஆக்கம்பெற வழிசெய்தது.

"நிதியுங் கணவனும்
நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்"

என்பதைப் படித்துவிட்டுச் சுதி குறைந்த பாடகன்போல் சோர்ந்த காலை,

"உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே"

என்ற பாட்டு, சோர்வு நீக்கி ஆர்வ மூட்டிச் செயலாற்றத் தூண்டியது.

"நினையாத முன்வந்து
நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்பதற்கு மறுமொழியாய்,

"முயற்சி திருவினையாக்கும்
முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்பது எழுந்து மக்கள் கண்ணில் நம்மை ஒளி வீசச் செய்தது.

"அடுத்து முயன்றாலும்
ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா"

என்ற கருத்தால் எழுச்சி குன்றிய மாந்தரை,

"முயற்சி மெய்வருத்தக்
கூலிதரும்"

என்ற அடி, உணர்ச்சி ஊட்டிச் செயலாற்ற வைத்தது.

இங்ஙனம் இலக்கிய உலகில் நன்னம்பிக்கை முனைகள் பல தோன்றி மக்களுக்கு நம்பிக்கையும் ஊக்கமும் அளித்து 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று பறை சாற்றின.

இத்தகைய இடுப்பொடிந்த பேச்சுக்கள், முதுகெலும்பில்லாத மொழிகள், இரத்த ஓட்டமில்லாத சொற்கள், ஊமைக் கருத்துக்கள் நாட்டில் எப்பொழுது நடமாடத் தொடங்கின?

இலக்கிய வரிசையில் 'சமய இலக்கியம்' என்ற ஒரு பகுதி தொடங்கிய காலத்திலேதான் இக்கருத்து வானவில், காவிய வானிடைத் தோன்றியது. சங்க காலத்தில் சமயம் தனிக்கலையாக இல்லை. கடவுள், உயிர், உலகம் என்ற அளவிலேயே சமயம் இருந்தது. எடுத்துக்காட்டாக "மாயோன் மேய மைவரை உலகம்" என்ற அடி தொல்காப்பியத்து உள்ளது. நிலப் பாகுபாட்டையும் தொழில்களையும் உரைக்க வந்த விடத்து மாயோன், சேயோன் என்று நிலத்தலைவர் பெயர்களை உரைக்கிறார். 'இவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று தோத்திரம் செய்யவில்லை தொல்காப்பியர். இக்காலத்திற்குப் பிற்பட்டு கி. பி. 13 ம் நூற்றாண்டு வரை சமயக் கொள்கைகள் நாட்டில் பரவத் தலைப்பட்டுத் தழைத்தோங்கத் தொடங்கின. பௌத்த நூல்களில் சமயக்கொள்கைகள் கடல்போல் பரந்து காணப்பட்டன. மணிமேகலை, பௌத்த சமயக்களஞ்சியமாகக் காட்சி அளித்தது. குறைவுற்ற நிலையில் கிடைக்கும் குண்டலகேசியில் அகப்படும் சில பாடல்களும் முன்னோர் மொழி பொருளையே பின்பற்றுகிறது. இலக்கண நூலாகிய வீரசோழியமும் இதற்கு விதிவிலக்கன்று.

இதனைத் தொடர்ந்து சமண சமயக் கொள்கைகள் தங்கள் சாயலை யாண்டும் காட்டி நடனமாடின. சமணக் கோட்பாடுகள் பொதிந்த நூல்கள் தமிழக வானில் ஒளிவிடும் நட்சத்திரங்களாய் உலவின. என்பினும் இலக்கியக் களஞ்சியங்களாய் இலங்கின. சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணி, நரிவிருத்தம், மேருமந்தர புராணம், சூடாமணி நிகண்டு முதலியவை அக்கருத்துக்களைப் பரப்பும் பிரச்சார பீரங்கிகளாய்ப் பிறங்கின. நன்னூலாகிய இலக்கண நூலும், சமயம் பரப்புதலைத் தன் கொள்கையாகக் கொண்டு சில நூற்பாக்களை அளித்தது. "மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்பது அவற்றில் ஒன்று. இலக்கண நூலைப் படிப்பது, பிழையின்றி எழுதவும் பேசவும் தெரிந்துகொள்வதற்கு. ஆனால், பவணந்தியாரைக் கேட்டால் இந்த பதிலைத் தரமாட்டார். 'பரமன் பாதம் பற்றவே பனுவல் படிக்க வேண்டும்' என்பார்.

"அறம் பொருள் இன்பம் வீடு
அடைதல் நூற்பயனே"

என்று இசைப்பார். நன்னூல் படிப்பதன் பயன் மோட்சம் பெறுதல் என்கிறார். மோட்சம் அடையப் புதுவழி காட்டுகிறார் முனிவர். இதுவரை நாம் கேள்விப்பட்டதெல்லாம், நீரில் மூழ்கி, நிகண்டு கற்று நெருப்பில் நின்று நிமலனை வழிபட்டால் நிச்சயம் முத்தி கிடைக்கும் என்பதே. ஆனால் சமண முனிவர் சாற்றுவது சற்று விந்தையாகவே உள்ளது. சிந்தைக்கு விருந்தளிக்கிறார் செந்தமிழ் இலக்கணம் செய்யப் புகுந்த முனிவர். கற்பதன் பயன், மொழித்திறத்தின் முட்டறுத்தல் என்றால் நம்மால் புரிந்துகொள்ள முடியும்; மோட்சம் அடைதல் என்றால், அது ஆவியுலக ஆராய்ச்சிக்காரர் மேற்கொள்ள வேண்டிய வேலை. இப்படி இலக்கணத்திலும் சமயக்கருத்துக்கள் சதுராடத் தொடங்கின. இதன் விளைவாகத் தனிப் பண்பு தழைத்த தமிழர் வாழ்வில் தத்துவக் கருத்துக்கள் தலையெடுக்கத் தொடங்கின.

— 6-ம் பக்கம் —

தீச்சுடர் வளர்ச்சிக்காக
சிறப்புச் சொற்பொழிவு
13-5-56 ஞாயிறு மாலை
5 மணிக்கு
சர். புட்டண்ணா செட்டி
டவுன் ஹாலில்
தலைவர் :
திரு. மா. மன்னர்
சொற்பொழிவாளர்கள் :
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். இராசேந்திரன்
தோழர் சி. பி. சிற்றரசு
இன்னிசை விருந்து :
திருமதி ஜி. கஸ்தூரி
(சினிமா பின்னணி பாடகர்
சென்னை)
கட்டணம் : 0-15-9, 0-8-0
நன்கொடையாளர்களுக்குத் தனி
இடமுண்டு.
புட்டண்ணா செட்டி டவுன்
ஹாலில் 13-5-56 ஞாயிறு
காலை 9 மணியிலிருந்து
டிக்கட் விற்கப்படும்.
அமைப்பாளர் :
தி. மு. க.
பெங்களூர் மாவட்டம்.

மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்
மகத்தான சித்திரம் !
ஆடும் மாடும்
தோழர் டி. கே. சீனிவாசன்
உருவாக்கிய கற்பனை ஓவியம் !
" எப்போது வரும் ?" என்று
கேட்பீர்களே ! இதோ !
இப்போது வந்திருக்கிறது !
இடிந்துபோன சமுதாயத்தைக் கண்டு மனம் வெதும்பிய எழுத்தாளனின் இதயக் குமுறல். அழுதாள் ஒருத்தி — அனாதையாக !
அந்தக் கண்ணீர்த் துளிகளிலிருந்து பிறந்த காவியம்.
இதற்கென்றே பாலு சகோதரர்கள் உருவாக்கித் தந்த மூவர்ண முகப்புச் சித்திரம்.
240 பக்கங்கள் : விலை ரூ. 2-8-0.

எண்ணம்

சோழமண்ணிலே வேழப்படை!

★ வேழப்படையினர் சோழநாட்டில் கூடி, வாளுக்குக் கூரேற்றப் போகும் அந்த நான்கு நாள் பணியினை நாடு எதிர்பார்த்து நிற்கிறது. தமிழகத்தின் அரசியலில் புதியதோர் திருப்புமுனை வேண்டும் எனத் துடித்துநிற்கும் தூயமணிகள் நமது மாநில மாநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

★ எதிர்ப்படை இல்லாத நேரத்தில் எக்காளமிடும் காமராஜர், நமது கவனம் அனைத்தையும் மாநில மாநாடு கவ்விக்கொண்டிருக்கும் வேளையில், நாடு, நகரம், காடு, மலையெல்லாம் சுற்றி நம்மை வசைபாடிவிட்டு, இப்போது கலங்கித் தவிக்கிறார். காமராஜரின் கனவிலும் நினைவிலும் 'வள்ளுவர் நகர்' வந்து வந்து போகிறதாம்! என்ன ஆகுமோ என்ற ஏக்கமும், ஆனந்த வாழ்வு 'அற்ப ஆயுளோடு' முடிந்துவிடுமோ என்ற அச்சமும் அவரது இதயத்தைத் துளைத்துக்கொண்டிருக்கின்றன.

★ அவை யடக்கம் இல்லாத சுப்ரமணியமும், அஞ்சி அஞ்சி வேதம் ராமநாதபுரம் ராஜாவும் குரல் நோக அலறிவிட்டு, மூளைப் பாதுகாப்புக்காக உதகை வாசிகளாயிருக்கிறார்கள். வள்ளுவர் நகர் முடிவுறியும் வரையில் தற்போது குடியிருக்கும் குளிர் நிலத்தைவிட்டு அவர்கள் வருவதாக இல்லையாம்!

★ தி மு. கழகமா? எழுத்தாற்றலும், பேச்சுவன்மையும் தவிர வேறு என்ன தெரியும் அவர்களுக்கு என்று எள்ளி நகையாடிய 'கரிய திருமேனி'கள், ''ஐய்யோ என் செய்வோம்! தெள்ளுதமிழ்த் தொட்டிலென வள்ளுவர் நகரையே நிர்மானித்து விட்டார்களே'' என மெய் வருந்திச் சாகிறார்கள்.

★ கோடை காலத்திலே டில்லிக்குக் குளிர் நடுக்கம் கண்டிருக்கிறது. எங்கே 'தமிழ்நாட்டுத் தேசியம்' தன்னம்பிக்கை இழந்துவிடுமோ என்று பயந்து நமக்கும் 'தேசியத்தி'ற்கும் முடிச்சுப்போடும் 'கூனி' வேலை பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

★ தேபர் வந்தார்! தொண்டர்களைத் தட்டிக்கொடுத்தார்' 'ஜாபர்' வேலைக்குச் சடுதியில் ஆள்சேர்க்க வழிவகை செய்துவிட்டுப்போயிருக்கிறார்; வளருகிறோம்; மிரளுகிறார்கள்.

★ நேருவைக் காணோம்! எங்கே இருக்கிறார் என்று மாநிலப் பிரதமர்களுக்கே தெரியவில்லையாம்! ஒருவேளை எதிர்கால ஓய்வுக்கு ஒத்திகையாக இருக்குமோ என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அவருக்குப் பதிலாக அவரது ஏவலாட்கள் தாளம் தவறாமல் கோரஸ் பாடி வருகிறார்கள் — 'தட்சிணப் பிரதேசம் வேண்டும்! தட்சிணப்பிரதேசம் வேண்டும்!'

★ நீறுபூத்த நெருப்போ, நேற்று முளைத்த சதியோ என்று மக்கள் சந்தேகிக்கும் வகையில் ஆளும் வர்க்கத்தினரின் பேச்சு அமைந்து வருகிறது நாட்டின் நலனல்ல முக்கியம், ஆளும் ஆளே பிரதானம் என்ற முறையில் இயங்கிவரும் அசோகச்சக்கரத்தின் ஆரக்காலை முறித்தெறிய, புதுமை விரும்புவோர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை முன்நின்று நடத்தும் வல்லமை நம்மிடம் தானிருக்கிறது என்பதை நாடு ஏற்றுக்கொண்டுவிட்டது. மாற்றாரில் கலந்திருக்கும் நல்லோரும் நமக்குத் துணைபுரியும் நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள்! நமக்கு அதற்கான திட்டம் தேவை! மிரட்டலினாலேயே வாழ்வை நடத்திச் செல்லும் மேனி மினுக்கிகளும் பெருமூச்செறியும் திட்டம் தேவை!

★ நாவலர் நெடுஞ்செழியன் - நமக்கு வாய்த்த சொல்லேறு-தலைமை தாங்கும் மாநில மாநாட்டில், கள்ளமிலாச் சிந்தைகொண்ட கருப்புடைச் சோமசுந்தரனாரைத் திறப்பாளராகக் கொண்ட மாநில மாநாட்டில்—இரேக்க நாட்டு மூத்த சிந்தனையையும் மிஞ்சிப்போன பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறப்புச் சொற்பொழிவைக் கொண்டுள்ள மாநில மாநாட்டில் நாடு எதிர்பார்க்கும் அத்தனையும் கிடைக்கும்!

★ சோழநாட்டில் வேழப்படை தோள்தட்டி நிற்கப்போகும் இத் திங்கள் 17, 18, 19, 20 களைத் தாயகம் மறவாது.

'நம் நாடு'-நமது போர்வாள்!

''இந்த வட்டாரக் கிளைக் கழகத் தோழர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 100 அன்பளிப்பு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு வகையில் பார்த்தால் 'நம் நாடு' இதழுக்கு இதுபோல அன்பளிப்புகள் வழங்குவது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், 'நம் நாடு' இதழ், இது போன்று அன்பளிப்புகளைப் பெற்றுத்தான் நடைபெற வேண்டியிருப்பது நமக்கெல்லாம் வருத்தம் தரக்கூடியதாகும். 'நம் நாடு' இதழைக் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் வாங்கிப் படிப்பது என்ற நிலை இருந்திருக்குமானால் வட்டாரக் கிளைகள் இதுபோன்று அன்பளிப்புகள் தந்துகொண்டிருக்க வேண்டியதில்லை.

''முதன் மந்திரி காமராசர் கழகத்தின் மீது நடத்துகிற தாக்குதலுக்குப் பதில் கூறும் வழி என்ன? நாங்கள், இதுபோன்ற மேடைகளில் பதில் தந்து விடுகிறோம். நீங்கள் பதில் தருவது எப்படி? கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கையில் 'நம் நாடு' இதழ் வைத்திருப்பதுதான் காமராசருக்கு நாம் தரும் சிறந்த பதிலாக இருக்க முடியும். அப்போதுதான், 'இவ்வளவு வளர்ச்சியும், செல்வாக்கும் பெற்ற இதழை நடத்துகிற கழகத்தையா காமராசர் அலட்சியமாகப் பேசுகிறார்' என்று நாட்டவர் கேட்பர்.

''பலன் தருகிறதோ இல்லையோ—சைவர்கள் விபூதிப் பட்டை அணிந்து கொள்கிறார்கள்; வைணவர்கள் பட்டை நாமம் தீட்டிக் கொள்கிறார்கள்; கிருத்துவர்கள் ஜெபமாலை வைத்துக் கொள்கிறார்கள்; மதப்பற்றுடையவர்கள் கட்டுப்பாடாக இந்தக் காரியங்களைச் செய்வதைப் போல, கழகத் தோழர்களும்—கட்டுப்பாடாக ஒவ்வொருவரும், 'நம் நாடு' இதழ் வைத்துக்கொள்ள வேண்டும். மதப் பற்றுடையவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது வேறெதுவும் இல்லாவிடினும், இந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியைக் கற்றுக்கொள்ள வேண்டும். எனவே, கழகத் தோழர்கள் இதுபோன்று, இதழ் வளர்ச்சிக்காக நன்கொடைகள் தருவதோடு, 'நம் நாடு' இதழைத் தவறாது வாங்கி இதழை வளர்ச்சியுறச் செய்வதற்கு வழி செய்ய வேண்டும்; 'நம் நாடு' நமது போர்வாள்! போர்வாள் வைத்திருக்க வேண்டியது வீரர்களுடைய கடமை என்பதை உணர்த்த விரும்புகிறேன்.''

—29-4-56 அன்று நடைபெற்ற சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா.

நாவலர் நாவலர்

ப. கணபதி

செயலாற்றும் வீரன் திறனாட்டுஞ்
செம்மல், செறுபகையாம்
புயற்காற்றைப் புன்சிரிப் பாலேற்றுப்
பூமாலை சூடிவரும்
வியலூட்டும் வேந்தன், விளங்குஞ்
செழியன் பொதுச்செயலோ
வயல்மேட்டில் தண்ணீர் வழங்கும்
உழவன் வகையதுவே.

கண்ணீரிற் றூன்றிநற் காவலா
லுன்னிக் கவின்சிறப்பால்
நந்நீர்மை முன்னேற்றம் நாளெல்லாம்
பெற்றோம், நறுங்கனிகள்
எந்நாளு முண்டெனும் ஈகையால்
இந்நாள் எழில்மலர
செந்நா வலன்செழி யன்சேவை
செய்வான் பொதுச்செயலே

பாதோற்கும் பேச்சில் படைசேர்க்கும்
பண்பில் பழைமையெலாம்
போய்த்தோற்கும் அண்ணாத் துரையண்ணல்
தூய்மை உரைமணியாம்
சேய்தோற்கும் இன்சொல், செவிசாய்க்க
''செல்வர் நெடுஞ்செழியன்
போய்ப் பார்க்க,'' என்றார் பொதுக்குழு
போனார் பொதுச்செயற்கே.



★ கண்ணதாசன் ★

சோழநாட்டைமுன்றும் குலோத்துங்கன் ஆண்டுகொண்டிருந்த காலம். தஞ்சையிலிருந்து ஒரு வீரன் கடப்பைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் அப்போது! நல்ல உயரம்; அதற்கேற்ற கனம். அழகு வடியும் முகம். தலைமயிர் நெற்றியிலே புரண்டு கொண்டிருக்கும் தோற்றம். கையிலே மின்னும் உடைவாள். கழுத்திலே முத்து மாலை — இத்தனை அழகுச் சிறப்பும் கொண்ட அந்த வீரன் பெயர் சேதிராயன். சேதிராயன்! ஆம்! அந்தப் பெயரைக் கேட்டால் சோழ மண்டலத்தின் பகைவர்கள் அஞ்சி நடுங்குவர். மூன்றும் குலோத்துங்கன் மெய்சிலிர்த்து மகிழ்வான். தஞ்சையும் உறந்தையும் தலை குனிந்து வணங்கும். பாண்டியநாடு பாட்டாகத் தீட்டும். சேரநாடு சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும். அவன் குலோத்துங்கனின் அன்புக்குப் பாத்திரமான தளபதி. நால்வகைப் படைக்கும் முதலாய தலைவன். ஐம்பெருங் குழுவும் அவன் சொற்கேட்கும். எண்பேராயமும் அவன் ஆணைப்படி நடக்கும். இத்தனை சீரும் சிறப்பும் பெற்ற அவன், குலோத்துங்கனுக்குத் திறை செலுத்தி வாழ்ந்துகொண்டிருந்த கடப்பை மன்னன் திருக்காளத்தி தேவனைக் காணப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

குதிரை தயாராக நின்றுகொண்டிருந்தது. சேதிராயன் குலோத்துங்கனின் வரவை எதிர்பார்த்தபடி அரசவையின் ஆலோசனை மண்டபத்தில் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். தாயின் அனுமதி பெற்றுவிட்டது. தங்கையும் அவனை வழியனுப்பிவிட்டாள். மன்னவனே அந்தப்புரத்திலிருக்கிருன். அவனது ஆணை பெற்றுக வேண்டும். நேரம் போய்க்கொண்டிருந்தது. சேதிராயனுக்கு இருக்கை கொள்ளவில்லை. "மன்னவர் சிக்கிரம் வந்துவிடமாட்டாரா? விடைபெற்றுக்கொள்ள மாட்டோமா?" என்று துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தான். அந்தி படும் நேரத்தில் தான் குலோத்துங்கன் அங்கே வந்தான். சேதிராயன் உயிர் வரப்பெற்றவனும் அவன் அருகில் சென்றுன்.

"மன்னு!"—சேதிராயனின் குரல் கனமாக ஒலித்தது. "நான் கடப்பைக்குப் புறப்பட இருக்கிறேன்; தங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போதே புறப்படுகிறேன்"—குலோத்துங்கன் ஆச்சரியத்தோடு தலைநிமிர்ந்தான். "ஏன்? எதற்காக?"—குழப்பத்தில் பிறந்தது இந்தக் கேள்வி, குலோத்துங்கனிடமிருந்து.

"சென்ற திங்கள் செலுத்த வேண்டிய திறையை இன்னும் செலுத்தவில்லை திருக்காளத்தி தேவன்! என்ன ஆயிற்று, ஏனித்தத் தாமதம் என்பதை அறியவே இன்று நானங்கு செல்கிறேன்" என்றுன் சேதிராயன். குலோத்துங்கன் முகம் மலர்ந்தது; குளிர்ந்த பார்வை பிறந்தது. இரண்டு கைகளையும் சேதிராயன் தோள்களிலே வைத்து, "கடமை தவருக் கண்ணியனே, உன்னை நம்பித்தான் வாழ்கிறது சோழ மண்டலம்! காலத்தால் செய்யவேண்டிய செயலறிந்து தவருது செய்யும் உன்னை எப்படித்தான் புகழ்வதென்று எனக்குத் தெரியவில்லை. சோழ மண்டலம் உள்ள வரைக்கும் உன் பெயர் அழியாது; போய் வா!" என்றுன். சேதிராயன் புறப்பட்டான். அவன் கண்ணுக்கு மறையும் வரை அந்தத் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான் குலோத்துங்கன். அவன் இதயத்திலே சொல்ல வொண்ணு உணர்ச்சி பெருக்கெடுத்தது. புன்னகை அவன் இதழ்களில் பொங்கி வழிந்தது. அந்தப்புரம் நோக்கி நடந்தான்.

சேதிராயன் ஏறிச்சென்றகுதிரை காடு மேடுகளைக் கடந்து கடப்பை நோக்கிப் பறந்தது. திருக்காளத்தி தேவனிடம் திறை வாங்குவது மட்டுமல்ல, சிரிக்கும் முகத்தாள், செங்கமலப் பாதத்தாள் **தேன்மதி**யைக் காண்பதும் சேதிராயன் பயணத்தின் நோக்கங்களில் ஒன்று என்பதை அறிந்துதானே என்னவோ, அந்தக் குதிரை அவ்வளவு வேகமாக ஓடிற்று.

இதோ வந்துவிட்டது கடப்பை. பசியவயல்களுக்கு நடுவில்அமைந்த பழத்தோட்டம்போல் காட்சியளிக்கும் கடப்பை. சேதிராயன் ஏறி வந்த குதிரை தலைநிமிர்ந்து நடந்தது நகருக்கு நடுவே. குதிரையின் கண்கள் பாதையைத்தான் பார்த்தன. அது ஏற்றிவந்த வீரனின் கண்களோ எட்டுத்திசையையும் வட்டமிட்டன. நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த மாடிவீடுகள் அவற்றின் எதிரே சிறிய வாணிபம் நடத்தும் வணிகர்கள். அந்த வணிகர்களோடு பேரம் பேசும் மங்கையர் திலகங்கள். குறுக்கிலும், நெடுக்கிலுமாக ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகள். அந்தக் குழந்தைகளை அதட்டியபடியே ரதம் செலுத்தும் சாரதிகள். அந்த ரதத்தில் அமர்ந்தபடியே பெண்களின் பேரழகை வட்டமிடும் பெருந்தனக்காரர்கள். இப்படியாகப் பரபரப்போடு இயங்கிக்கொண்டிருந்த கடப்பை நகரிலே அன்னநடை போட்டு நடந்து கொண்டிருந்தது சேதிராயன் குதிரை.

நகரத்தின் வடபால் அமைந்திருந்த ஒரு ஊருணியின் கரைக்கு வந்தான் சேதிராயன். அந்தக் கரையில் வரிசையாக அமைக்கப்பட்டிருந்த வீடுகளில் எட்டாவது வீடு எதுவென்று எண்ணி அதன் கிட்ட வந்து குதிரையை நிறுத்தினுன். அந்த வீட்டின் கதவு சாத்தப்பட்டிருந்தது. முன்பகுதியில் அமைதி குடிகொண்டிருந்தது. ஒரு கிழவன் திண்ணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். சேதிராயன் மெதுவாகக் கதவைத் தட்டினுன். உள்ளே யிருந்தபடி "யார்?" என்னும் கேள்வியைத் தொடுத்தது ஒரு மெல்லியகுரல். சேதிராயன் மனம் கூத்தாடத் தொடங்கியது. ஆம், அது தேன்மதியின் குரல்.

"தேன்மதி! நான்தான் சேதிராயன், கதவைத் திற" என்று காற்றுக்குரலில் சொன்னுன் சேதிராயன். கதவு திறக்கப்பட்டது. சேதிராயன் அந்தக் காந்தச்சிலையைக் கண்டான். கணநேரம் அப்படியே நின்றுன். புத்தாடை அணிந்து, பொன் நகைகள் சூடி, முத்தாரம் ஒன்றை முன் மார்பில் ஆடவிட்டு, வளமான மேனியின் வனப்பைப் பெருக்கிக்கொண்டிருந்தாள் தேன்மதி. 'தேன்மதி!' என்று ஆவலோடு அழைத்தவாறு உள்ளே நுழைந்தான் சேதிராயன். சற்றே விலகி நின்று, தலைகுனிந்து "வாருங்கள்" என வரவேற்றது அந்தத் தங்கச்சிலை. "தேன்மதி! இத்தனை நாளும் உன்னைக் காணமலிருந்தது பாதி உயிரைப் பறித்து விட்டது. அப்பாடா, இப்போது தான் அது திரும்பி வந்தது" என்றுன் சேதிராயன்.

தேன்மதி பேசாமலிருந்தாள்.

சேதிராயன் அவளருகில் சென்று, "தேன்மதி! ஏன் மௌனம்? நாணமா? இல்லை; பேச மனமில்லையா?...உம்....காடு மலை மேடு கடந்துவரும் காதலனுக்கு மௌன வரவேற்பு மகத்தான சோதனையாகுமே, கண்ணே! பேசு!...உம்...அடே! ஏன் பேச மாட்டேனென்கிருய்? ஆவணித் திங்களில் வந்திருந்தபோது, அத்தான்! அத்தான்! என்று ஆடி ஆடி வரவேற்ருய்! ஆறு திங்கள் கழித்து வந்திருக்கிறேன்; ஏன் அசையாமல் நிற்கிருய்? ஊடலா? வந்த, உடனேயா? ஒரு வார்த்தை பேசு; பழரசம்போல் பருகுகிறேன். முத்தான மறு வார்த்தைக்கு வேண்டுமானல் மூடிக்கொள், வாயை! தேன்மதி!......"

அவள் அசையவுமில்லை; நிமிரவுமில்லை.

"நீ பேசாமலிருந்தால், நான் போய் விடுவேன். போகட்டுமா?..." செல்லமாகப் பயமுறுத்தினுன், சேதிராயன்.

—அதற்கும் மௌனமே பதில்.

"என்னடா இது! கடப்பையைச் சோழன் பிடித்து, ஊர்வலம் வந்த அன்றே, என் உயிர் உன்னைக் கண்டது; உறவு கொண்டது. சோழ நாட்டுக்குக் கடப்பையினுல், எந்த லாபம் இருந்தாலும் இல்லாமற் போனுலும், சந்திரமுகத்துத் தையலாளை நான் சந்திக்க நேர்ந்த லாபம் கிடைத்தது என்று மகிழ்ந்தேன். மறுவரவும் மகிழ்ச்சியையே தந்தது. பிரியும் போது கண்ணீர் வடித்தாய்; "என்னையும் அழைத்துப்போங்கள்" என்ருய். தாயிடமும் தங்கையிடமும் முன்கூட்டியே அறிவித்து விட்டு வந்து அழைத்துப்போகிறேன் என்றேன். வந்திருக்கிறேன்; வாய்திறக்க மறுக்கிருய்! சிந்து பாடும் தென்றலே! தேன்மதி! இனியும் பொறுக்க என்னுல் முடியாது!......"—என்று பொழிந்த சேதிராயன், அவள் தோள்களிலே கைவைத்தான். சடாரென விலகினுள், தேன்மதி. தலைநிமிர்ந்தாள். அவள் கண்களிலே கண்ணீர் ததும்பி நின்றது. பரிதாபப் பார்வை அது என்பது, அந்தக் கண்ணீருக் கிடையிலும் பளிச்செனத் தோன்றியது. மெதுவாக சேலைத் தலைப்பை விலக்கிய தேன்மதி, உள்ளிருந்து, ஒன்றை எடுத்து வலதுகையில் வைத்தவாறு சேதிராயனுக்குக் காட்டினுள். தாலி!—சேதிராயன் திடுக்கிட்டான். "தேன்மதி!" என்று கதறினுன். தேன்மதி இப்போது வாய்விட்டு அழுதாள். சேதிராயன் தலை சுழன்றது.

தேன்மதி பேசினுள்.

"ஆறுதிங்கள் பிரிவு என்னை வேருெருவருக்கு அடிமையாக்கி விட்டது. நீடுநின்ற என் சுதந்தர வாழ்வை ஆளவந்தவர், அரசவையின் முன்னுள் தளபதி. காதலித்தோம் நாம்; யாரறிவார்? ஊருணித் தரையில்; பாசறை அருகே ஒரு நாள்; அரசவை விழாவில் ஒரு முறை—பேசிய கண்களும் பிணைந்த இதயமும் தவிர யாரறிவார் நம் காதலை? பெற்றவரிடம் சொன்னேன், எள்ளிச் சிரித்தார்! "காதலிக்கிருயா, சோழவீரனை? கனவு காண்கிருயா மணப்பானென்று? ஆளும் நாட்டான் அவன்; அடிமை நாட்டார் நாம். ஆசை தீர்க்கும் தாசிகளில் ஒருத்தி என எண்ணியிருப்பானே தவிர, அன்பு மனையாளாக்க அணுவளவும் சிந்தித்திருக்கமாட்டான். வேண்டாம் மகளே, விபரீத ஆசை. விட்டுவிடு!" என்ருர். "இல்லை! என் கண்ணுளரை நான் அறிவேன், தூய்மையான இதயம்; சொன்ன சொல் தவறமாட்டார்!" என்று வாதாடினேன். ஏற்கவில்லைஅவர்கள். மணமுடித்தார் வாள்வீசயராயருக்கு! முன்பு நீங்கள் வந்தபோது எவ்வளவு கெஞ்சினேன். "இட்டுச் செல்லுங்கள் என்னையும்" என்று எவ்வளவு சொன்னேன்! எதற்காகச் சொன்னேன்? இது நடந்து விடும் என்ற பயத்தினுல் தானே?

— 10-ம் பக்கம் —

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் எதிர்பாராத மாற்றத்தை விளைவித்த, காந்தி-ஜின்னா கடிதத் தொடர்பின் இரண்டு கடிதங்களை கீழே பிரசுரித்திருக்கிறோம். ஜின்னாவின் உறுதியும், காந்தியாரின் மனோபாவமும் இங்கே புலனாகின்றன. இதுபோல்......?

இரு கடிதங்கள்!

11, செப்டம்பர், 1944

அன்பார்ந்த காந்தி,

செப், 11-ம் தேதி தாங்கள் எழுதிய கடிதம், இன்று மாலை 5 மணிக்குக் கிடைத்தது. தாங்கள் சொந்த முறையிலேயே என்னைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக என் கருத்து என்ன என்பதை, ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். தாங்கள் யாருக்கும் பிரதிநிதியாக வராமல் சொந்த முறையில் வந்திருக்கிறீர்கள். இம்மாதிரியான விஷயம் இதற்கு முன் நிகழ்ந்ததே இல்லை. தயவு செய்து, நான் இதை ஒப்புக்கொள்வதாக நினைத்துவிடாதீர்கள். தாங்கள் சொந்த முறையில் வந்தபோதிலும், என்னால் முடியுமானால் தங்களை என் வழிக்குத்திருப்ப ஆவலாயிருக்கிறேன். ஆகவே தங்களுடன் விவாதிக்கத் தொடங்கினேன்- 1940-ம் ஆண்டு மார்ச்சுமீ லீகில் நிறைவேறிய லாகூர்த் தீர்மானத்தில் சுருக்கமாகச் சொல்லியிருப்பதுபோல, இந்தியாவை ஹிந்துஸ்தானம் என்றும் பாகிஸ்தானம் என்றும் பிரிக்க ஒப்புக்கொண்டு, மற்ற விஷயங்களையும் இப்போதே தீர்த்து முடிவு செய்ய வேண்டும். இந்தியப் பிரச்னையைத் தீர்க்க இதுவே வழி என்று தங்களிடம் பலமாக வற்புறுத்தினேன். லாகூர்த் தீர்மானம் தெளிவாயில்லை என்று தாங்கள் கூறுகிறீர்கள். அதை விளக்கும்படியாகத் தாங்கள் கேட்கவேயில்லை. அதற்கு மாறாக அதன் முக்கியக் கருத்துக்களையே தாங்கள் பலமாக எதிர்த்தீர்கள். ஆகையால், லாகூர்த் தீர்மானம் எந்த வகையில் தெளிவாயில்லை என்பதை அறிய, நான் விரும்புகிறேன். ராஜாஜி அதன் சத்தை எடுத்து, அதற்கு ஓர் உருவம் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதற்கு மாறாக, அவர் அதை உருக்குலைத்தது மல்லாமல், சிதைத்து மிருக்கிறார். லாகூரில் 1944-ம் ஆண்டு ஜுலை-மீ கூடிய அ. இ. மு. லீக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இதை நான் சொல்லியிருக்கிறேன்.

'எல்லாக் கட்சிகளும் வகுப்புகளும் சேர்ந்து ஒன்றாக முயன்று சுதந்தரம் பெறவேண்டும். சுய நிர்ணய உரிமையை அனுபவிப்பதற்கு அது முதல் நிபந்தனையாகும். துர்ப்பாக்கியவசமாக, எல்லோரும் சேர்ந்து ஒன்றாக முயல்வதற்கு இயலாமற் போனால், சேர்ந்த கட்சிகளின் உதவியுடன் நான் 'போராடுவேன்' என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். இது, மாட்டுக்கு முன்னாலே வண்டியைக் கொண்டுபோய் நிறுத்துவதாகும். இது லீகின் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானதாகும். இதை நான் பலமுறை சொல்லி யிருக்கிறேன். 1942-ம் வருஷ ஆகஸ்ட் தீர்மானத்தைத் தாங்கள் இன்னும் கைவிடவில்லை. இந்திய மக்கள் சுதந்தரமடைவதற்கு, முதலாவதாக இந்து—முஸ்லீம் ஒப்பந்தம் ஏற்படவேண்டியது அவசியமாகும்.

நாம் இருவரும் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக, காங்கிரசிடம் தங்களுக்கிருக்கும் செல்வாக்கு முழுவதையும் உபயோகிப்பதாகச் சொல்லுகிறீர்கள். அதற்காக, என் வந்தனம். அத்தகைய உதவி எனக்கு மிக்க ஆதரவாயிருக்கும். ஆனால், அது எனக்குப் போதாது;

இடைக்கால அரசாங்கத்தை எந்த ஆதாரத்தின் மேல் ஏற்படுத்துவது? இது சம்பந்தமாகத் தங்கள் கருத்தைத் தயவுசெய்து எனக்குத் தெரிவியுங்கள்.

எல்லை நிர்ணயக் கமிஷன் செய்யும் முடிவை யார் அமுலுக்குக் கொண்டு வருவதென்று நான் கேட்டிருந்தேன். தாங்கள் அதற்குப் பதில் எழுதவில்லை 'முற்றிலும் பெரும்பான்மை' என்பதற்கு, 'சிந்து, பலுசிஸ்தானம் எல்லைப்புற மாகாணங்களில் முஸ்லீமல்லாதாரைக் காட்டிலும் முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராக இருப்பதைப்போல இருக்கவேண்டும்' என்று சொல்லுகிறீர்கள் இதுவும் எனக்கு விளங்கவில்லை. எந்த மாதிரியான முறையில் சர்வஜன ஓட்டு எடுப்பது, எத்தகைய வாக்குரிமை அளிப்பது என்று நான் கேட்டிருந்தேன். தாங்கள் அதற்கும் பதிலே அளிக்கவில்லை.

'சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளும்' என்று தாங்கள் கூறும்போது அதன் பொருள் என்ன என்று எனக்குச் சரியாக விளங்கவில்லை.

'பரஸ்பர ஒப்பந்தம்' என்றால், கையொப்பம் செய்யப் போகும் இரு கட்சிகளும் சேர்ந்து செய்துகொள்ளும் ஒப்பந்தம் என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். தங்கள் கருத்துக்கிணங்கத் தற்காலிக அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, கையொப்பமிடும் கட்சிகள் எவை? தற்காப்புப் போன்றவைகளைப் பாதுகாப்பதற்காக, கூட்டு ஆதிக்க போர்டு ஸ்தாபனத்தை யார் ஏற்படுத்துவது? எந்த முறையில்? யார் மூலம்? அது யார் ஆதிக்கத்தில் இருக்கும்?

'அதிகாரத்தை, தேசத்துக்கு அதாவது தற்காலிக அரசாங்கத்துக்கு மாற்ற வேண்டும்' என்று தாங்கள் கூறுகிறீர்கள். தங்கள் கருத்திலிருக்கும் தற்காலிக அரசாங்கத்தைப்பற்றிய எல்லா விவரங்களையும் நான் அறிய விரும்புவதற்கு இதுவே காரணம்.

தங்கள் அன்புள்ள

எம். ஏ. ஜின்னா.

★

14, செப்டம்பர், 1944

அன்பார்ந்த காயிதே ஆஜம்,

செப். 13-ம் தேதி தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. நாம் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து, தாங்கள் பதிலுக்காக அவசரப்படவில்லை என்று நினைத்தேன். ஆகையால், அதைச் சாவதானமாகக் கவனிக்கலாமென்று கருதினேன். மேலும் நம் சம்பாஷணை தொடர்ந்தது. அன்பும் அதிகமாயிற்று. இரு தரப்பு விஷயமும் தானாகவே விளங்குமென்றும், கடைசியில் நாம் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை மாத்திரம் எழுத வேண்டியதாயிருக்கும் என்றும் நினைத்தேன். ஆனால், தங்கள் கருத்தை நான் புரிந்துகொண்டு, அதைப் பாராட்டுகிறேன். நாமாக எதையும் சரியென்று நினைத்துக் கொள்ளலாகாது. நான் ராஜாஜியின் திட்டத்தைத் தங்களுக்கு விளக்க வேண்டும். அதேபோல, தாங்கள் லாகூர்த் தீர்மானத்தை எனக்கு விளக்க வேண்டும்.

லாகூர்த் தீர்மானத்தைப் பற்றி, நான் தனியாக வேறொரு கடிதத்தில் எழுதுகிறேன்.

ராஜாஜி லாகூர்த் திட்டத்தைச் சிதைக்கவோ உருக்குலைக்கவோ இல்லை. அதற்குச் சத்தும் உருவமும் கொடுத்திருக்கிறார். நம்முடைய விவாதம் முடிந்த பிறகாவது, நாம் இதைத் தெரிந்துகொள்ளலாம்.

ராஜாஜியின் திட்டம் தங்களுக்குப் பிடிக்காததால் நான் தற்காலிகமாக அதைப்பற்றி யோசிக்கவில்லை. நாம் இருவரும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முறையில் ஏதாவது வழி இருக்கிறதா என்று, லாகூர்த் தீர்மானத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். தங்கள் கடிதத்திலுள்ள முதல் பாராவுக்கு இது பதில்.

இனி, இரண்டாவது பாராவை எடுத்துக் கொள்ளுகிறேன்; மூன்றாம் மனிதனை வெளியேற்றாத வரை, நாம் ஒருவரோடொருவர் அமைதியாக வாழ முடியாதென்று உறுதியாகக் கருதுகிறேன்.

எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு தற்காலிகமாக சர்க்கார் அமைப்பது என்று என்னைக் கேட்கிறீர்கள். இது சம்பந்தமாக ஏதாவது திட்டம் இருந்தால், அதைப் பற்றித் தங்களிடம் சொல்லியிருப்பேன். நாம் இருவரும் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்தால், மற்றக் கட்சிகளைக் கலந்து ஆலோசிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

தற்போது ஏற்படுத்தப்படும் இடைக்கால அரசாங்கம் மக்களுக்கு நம்பிக்கை யுண்டாக்கத் தக்கதாக இருக்க வேண்டுமானால், அது எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதியாக இருக்க வேண்டும். இதை மாத்திரம் நான் சொல்ல முடியும். அத்தகைய சமயம் வரும்போது, எனக்குப் பதிலாக, அதிகாரம் பெற்ற பிரதிநிதி யாராவது ஒருவர் வருவார். ஆனால், தாங்கள் என் கருத்தை மாற்றிய பிறகோ, அல்லது தங்கள் கருத்தை நான் மாற்றிய பிறகோ, அல்லது இருவர் கருத்தும் மாறி, இரண்டு உடலாயிருந்த போதிலும் ஒரு மனமாக மாறிய பிறகோ, நான் என்றும் தங்களருகிலே இருந்து தங்களுக்கு உதவி செய்வேன்.

எல்லை நிர்ணயக் கமிஷன் சபையைத் தற்காலிக சர்க்கார் ஏற்படுத்தும், அதன் முடிவையும் தற்காலிக சர்க்காரே அமுலுக்குக் கொண்டு வரும். நான் முன்பு எழுதிய பதிலிலேயே இந்தக் கருத்தும் அடங்கியிருக்கிறதென்று நினைத்தேன்.

'முற்றிலும் பெரும்பான்மை' என்ற சொல்லை, சாதாரணமாகச் சட்ட விவகாரங்களில் உபயோகிக்கும் பொருளிலேயே உபயோகித்திருப்பதாக, ராஜாஜி சொல்லுகிறார். நான் முன்பு சொன்ன பதிலையே மீண்டும் கூறுகிறேன். ஆனால், தாங்கள் அதற்கு வேறொரு பொருள் சொல்லி, அதை ஏற்றுக் கொள்ளும்படியாக என்னைத் தூண்டலாம்.

எந்த மாதிரியான சர்வஜன ஓட்டு எடுக்கவேண்டும், மக்களுக்கு எத்தகைய வாக்குரிமை வழங்க வேண்டும் என்பதை, நாம் இப்போது நிர்மாணிக்க வேண்டும்; அல்லது இடைக்கால அரசாங்கத்தின் முடிவுக்கு விட்டுவிடவேண்டும்.

பாகிஸ்தான் பகுதியில் வாழும் மக்களில் வயது வந்தோர் அனைவருக்குமே ஓட்டுரிமை அளித்து, சர்வஜன ஓட்டு எடுக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

'எல்லாக் கட்சி'களும் என்பதற்கு 'நானும், தாங்களும், ஹிந்து முஸ்லீம் பிரச்னையைப்பற்றி அபிப்பிராயம் சொல்லத்தக்க மற்றவர்களும்' என்று பொருள்- இவர்கள் எல்லோரும் அமைதியான முறையில், ஜனநாயக நாடுகளில் நடப்பதுபோல, பொது ஜனங்களைத் தங்கள் வழிக்கு மாற்ற முயற்சி செய்வார்கள்.

சர்வஜன ஓட்டு, பிரிவினையை ஆதரிக்கிறதென்று வைத்துக் கொள்வோம். இரு தரப்பாருக்கும் பொதுவாக அமைந்திருக்கும் நலன்களை நிர்வாகம் செய்வதற்காக, இடைக்கால அரசாங்கம் ஓர் ஒப்பந்தத்தையும் உடன்படிக்கையையும் வகுக்கும். ஆனால், அந்த ஒப்பந்தத்தை, ஹிந்துஸ்தான் அரசாங்கமும் பாகிஸ்தான் அரசாங்கமும் ஊர்ஜிதம் செய்யவேண்டும், பொதுநல விஷயங்களைச் சமரசமாகத் தீர்த்து நிர்வாகம் செய்வதற்காக, ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும். அது எம்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி, இடைக்கால அரசாங்கம் ஆலோசித்து முடிவு செய்யும்.

தங்கள் அன்புள்ள,

எம். கே. காந்தி.

ஈ. வி. கே. சம்பத் அறிக்கை

மாநாட்டு அலுவல்களில் ஈடுபட்டு இருக்கும் இந்த நேரத்தில், சில ஊர்களிலிருந்து நமது தோழர்கள் டெலிபோனில் கவலையோடு ஒரு செய்திபற்றி விசாரிக்கத் தொடங்கியுள்ளார்கள். ஏதோ ஒரு பத்திரிகையில் தி. மு. க. விலிருந்து நான் ராஜினாமா செய்துவிட்டதாக நானே கடிதமெழுதி அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரிவித்திருப்பதுபோல், பிரசுரிக்கப்பட்டிருப்பது குறித்தே நமது தோழர்களில் சிலர் இத்தனை பரபரப்புக்கு உள்ளாகி விட்டிருக்கின்றனர். பத்திரிகையின் மீது வந்த கோபத்தை விட விசாரித்த தோழர்கள் மீது தான் எனக்கு வருத்தம் உண்டாயிற்று. ஏனெனில் திராவிட கழகப் பத்திரிகைகளே பொதுவாகப் பிறர்மீது பழிகளைச் சுமத்துவதில் பொறுப்புணர்ச்சியையோ கண்ணியத்தையோ கடைப்பிடிப்பதில்லை, என்பது நாடறிந்த உண்மையாகும். அதிலும் அந்த கோஷ்டியிலேயே மிக மட்டரகமான கழிசடை வாரப பத்திரிகையின் செய்தி கண்டு பரபரப்படைகின்றனர் நம்மவர்களில் சிலர். எண்ணும்போது வருத்தம் மேலிடாமல் என்ன செய்யும்?

அந்த வாரப் பத்திரிகையில் வந்த செய்தி முழுக்க முழுக்கப் போக்கிரித்தனமான பொய்ச் செய்தி என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்வதுடன், சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியருக்கும், செய்தி பொய்யானதென்பதை உடனடியாகப் பிரசுரிக்குமாறு பணித்து அறிவித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

ஈ. வே. கி. சம்பத்.

பொன் மணி

அவசரமில்லாத பேச்சு; எதையும் ஆழ்ந்து கவனிக்கும் குணம். இயக்க வளர்ச்சிக்குப் புதுப்புது ஆக்கவேலைகள் செய்துகொண்டே இருக்கவேண்டும் என்ற துடிப்பு; படபடப்பு இருக்காது - பக்குவமிருக்கும் அவர் செயலில்; ஆரம்பரமில்லாதவர்- அன்புள்ளங்கொண்டவர். அத்தனை பேருடைய உழைப்பைக்கொண்டும் இயக்கம் வளர வேண்டுமென்ற பேரவாக்கொண்டவர் - இத்தனை சிறப்பியல் புகளையும் கொண்டு விளங்குபவர்தான் நமது இரண்டாவது மாநில மாநாட்டுச். செயலாளர்களில் ஒருவராக இருந்து மின்னல் வேகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் திருச்சி எம். எஸ். மணி அவர்கள்.

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளாகவே இயக்கத்திற்கென உழைத்துவரும் செயல் வீரர் மணியைப் பற்றி அறிந்தவர்கள், நம்மைக் காட்டிலும் அந்நியக் கட்சிக்காரர்களேயாவர். இப்படி ஒரு உழைப்பாளி எங்களுக்கில்லையே என்று ஏங்கித் தவிக்கும் திருச்சி வட்டார மாற்றுக் கட்சிக்காரர்களை நாமறிவோம். செயல்பட முடியாத திட்டம் தீட்டுவதும், திட்டமில்லாது செயல்புரிவதும் தோழர் மணிக்குப் பிடிக்காத முயற்சிகளாகும். அதனால்தான் எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்துமுடிப்பதில் வல்லவர் என்று பெருமை பெறமுடிகிறது.

தோழர் மணி 1923 டிசம்பரில் திருச்சி - உறையூரில் பிறந்தார். தாயார் பெயர் தங்கச்சி அம்மாள். தந்தையார் பெயர் மாணிக்கத்தேவர். 1943 ல் தோழர் மணிக்கும் அகிலாண்டம் அம்மையாருக்கும் திருமணம் நடைபெற்றது. இன்று அவருக்கு திராவிடமணி என்று பதினேறு வயது மகன் இருக்கிறன்.

1945 முதல் 1947 வரை தோழர் மணி திராவிட கழகச் செயலாளராக இருந்தார். 1947 முதல் 1948 முடிய திருச்சி மாவட்ட திராவிட கழகச் செயலாளராகப் பணியாற்றினர். 1949 முதல் இன்றுவரை திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் மணிதான். 1949 முதல் மணி தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர். தோழர் மணி திருச்சி மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டுச் செயலாளராகவும், இரண்டாவது மாநாட்டுச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறர். இன்றைய இரண்டாவது மாநில மாநாட்டு இரு செயலாளர்களில் தோழர் மணியும் ஒருவர் என்ருல், அவருடைய முன்னைய பணிகள் இவ்வளவு சிறப்புடைத்தாக இருந்திருக்கவேண்டும் என்பதை நாடு முடிவுகட்டிக்கொள்ளட்டும். தோழர் மணி, 27-9-48ல் காமராஜருக்குக் கருப்புக்கொடி பிடித்து சிறை சென்ருர். 12-2-51 ல் மத்திய சர்க்கார் மந்திரிக்கு கருப்புக்கொடி காட்டி காராக்கிரக வாழ்வை மேற்கொண்டிருக்கிருர். 20-2-56 ல் பொதுவேலை நிறுத்தத்தை முன்னிட்டுக் கைது செய்யப்பட்டார். 1-2-49 லிருந்து திருச்சி மாவட்ட அச்சுத்தொழிலாளர் சங்கத் தலைவராகப் பணியாற்றி வருகிருர். தற்சமயம் சென்னை மாநில அச்சுத்தொழிலாளர் சம்மேளன துணை-செயலாளராகவும்; திருச்சி, சீரங்கம் கூட்டுறவு பால் வினியோக தொழில் சங்கத்தலைவராகவும், திருச்சி மாவட்ட பீடி, சுருட்டு தொழில் சங்கச் செயலாளராகவும் மற்றும் பல தொழில் சங்கங்களின் ஆலோசகராகவும், மற்றும் பல பொது ஸ்தானங்களிலும், கழகத்தின் முக்கிய சொற்பொழிவாளராகவும், இயக்கச் செயல்வீரராகவும் பணியாற்றி வருகிருர்.

இவருக்கு இளையவர்களாக ஆறு சதோரர்களும், ஒரு சகோதரியும் இருக்கிருர்கள். அறிஞர் அண்ணவின் மர்ருத அன்பைப் பெற்றவர். டால்மியாபுரம் போராட்டக் குழுவிற்குச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். வாழ்க மணி! வளர்க அவர்தம் தொண்டு!

தன்னம்பிக்கை...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

இதன் பின்னர் சமணத்தை அடக்கிச் சைவம் எழுந்தது. இரும்பு விலங்கு போய், பொன் விலங்கு மாட்டப்பெற்றது. புதிய மொந்தையில் பழைய கள். சமண அரசர் பலர் சைவம் புகுந்தனர். கூடு விட்டுக்கூடு பாய்ந்தனர் கொற்றவர்கள். சைவ மடங்கள் தமிழ் இலக்கியங்களைச் சமயச் சார்பாக வளர்த்தன. 'சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க' அவை இரவென்றும் பகலென்றும் பாராமல் எந்நேரமும் உழைத்தன. இதன் விளைவாகப் பிறந்தன புராணக் குழந்தைகள். இச்சைவத்தை வென்று வைணவம் அரியாசனம் ஏறிற்று. நாலாயிர திவ்யப் பிரபந்தம் [illegible] தொடங்கியது. கம்பராமாயணம், இம்பருலகில் இராமாவதார மகிமையை விளக்க [illegible]. இத்துடன் இப்பட்டியல் நிற்கவில்லை. பிற்காலத்தில் முன்வணிக்கு வந்து முகங்காட்டியது முகம்மதியம். சைவ வைணவத்தைப் போல், உமறுப்புலவர் சீருப்புராணம் பாடினர், 6000 பாடல்களில். அரைக்கம்பர். இவற்றை அடியொற்றிக் கிளர்ந்து எழுந்தது கிறித்தவம். மாசிலா ஏகநாதரின் மாண்பினை விளக்கத் தேம்பாவணியுடன் புறப்பட்டார் வீரமா முனிவர். விசித்திரமான முனிவர். வீரம் என்ருல் உள்ளத்திலே மட்டுமல்ல, உடையிலும், ஊர்ந்துவரும் பல்லக்கிலுங்கூட. இவர் ஆக்கிய சதுரகராதி செந்தமிழின் கருவூலமாய்க் காட்சி அளிக்கிறது. பிறகு, 20-ம் நூற்ருண்டு. நாம் வாழும் நல்ல யுகம். கண்ணெதிரே காணக்கூடிய காலம். அருணகிரியார் "திருப்புக"ழுடன் தோன்றுவார். "இராம நாடக"த்தை ஏந்திய வண்ணம் அருணசலக் கவிராயர் வருவார். குறவஞ்சியோடு திரிகூடராசப்பர் மகிழ்வார். இவையெல்லாவற்றிற்கு மேல், புரட்சி விதையைத் தூவிய வராகப் போற்றப்படும் பாரதியார் தம்முடைய பாட்டுக்களில் சமயச் சார்பினைக் காட்டியுள்ளார். பராசக்தி, காளிதேவி, கண்ணன் பாட்டு முதலியன சமய முத்திரை தாங்கித் திகழ்வன.

இங்ஙனம் சங்ககாலம் பிற்பட்டு இந்நூற்ருண்டு வரை தமிழ்க் குழந்தை, சமயச் செவிலியால் வளர்க்கப் பெற்று வந்திருக்கிறது. சொந்தத் தாயிடம் வளராத காரணத்தால், வலிவின்றிச் சோர்வுற்றுச் சிலநேரம் குழந்தை காணப்படுகிறது. மொழியையும் சமயத்தையும் ஒன்று சேர்த்து முடிச்சுப் போடும் வழக்கம், பாலங்கட்டும் பழக்கம் இத்தமிழ் மண்ணிலே தான் உள்ளது. இதனலேதான் இலக்கியத்தில் சில திருப்பு முனைகளும், அவற்றிற்கு அறை கூவல் விடுக்கும் நன்னம்பிக்கை முனைகளும் காணப்படுகின்றன. இவை இரண்டும் இல்லாதிருப்பதற்கு ஒரே வழி. பாரதிதாசனர் கூறுவது போல "சமயமெனும் சூளையிலே தமிழ்நாட்டால் முளைக்காது." ★

கண்ணதாசன் எழுதிய
இலக்கியக் கருவூலங்கள்

ராஜதண்டனை
சுவைமிக்க இலக்கிய
நாடகம் விலை ரூ. 2-0-0

மாங்கனி
சிறையில் பூத்த
செந்தமிழ்க் காவியம்
விலை ரூ. 2-0-0

மாநாட்டுப் பந்தலில் அமைந்திருக்கும் அருணேதயம் ஸ்டாலில் கிடைக்கும்!

ஒளி முத்து

1916-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் தேதி மானமதுரைக்கடுத்த 'பெருஞ்சேரி' என்ற சிற்றூரில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் திரு. சுப்பையா. இரண்டு வயது நடக்கும்போதே தந்தையார் இறந்துவிட்டார். அவருடைய மாமா திரு. கருப்பையாவின் ஆதரவில் வளர்ந்து வந்தார். பள்ளிக்கூடத்தில் குறும்புகளைப் பொழுது போக்காகக் கருதிய இவரை ஆசிரியர்களும், தடியடியில் தொடங்கி...தோப்புக்கரணம் ... சோதண்டம் போடுவது வரை செய்து, திருத்த எவ்வளவோ முயன்றனர்...முடியவில்லை! பன்னிரண்டாவது வயதுவரை படித்தார். அதன்பிறகு, படித்ததெல்லாம் போதுமென்று புத்தகங்களைக் கட்டி வைத்து விட்டுப் பர்மாவுக்குப் போனர்.

பதினருவது வயதில் தாயகம் திரும்பிய முத்து இரண்டாண்டுகள் விவசாய வேலை செய்தார். 1937-ம் ஆண்டு ஹார்வி மில்லில் வேலைக்கமர்ந்தார். அப்போது தான் முத்துவுக்கு இயக்க உணர்ச்சி உண்டானது. ஆறுமுகம் என்ற தோழரால் கட்சியைப் பற்றித் தெரிந்துகொண்டார். மதுரைத் தொழிலாளர் தலைவர் திரு. வரதராஜுலு நாயுடுவின் செயல்கள் இவருக்கு ஆத்திரத்தை மூட்டின. இந்தி எதிர்ப்பு முழக்கத்துடன் வீதியில் தமுக்கடித்துச் சென்றவர்களை உதைத்து, தமுக்கையும் கிழித்தெறிந்து விட்டனர் நாயுடுவின் ஆட்கள். உடனே நம் இயக்கத் தலைவர்கள் எல்லாம் ஆளுக்கொரு தமுக்கை கட்டிக்கொண்டு விதிக்கு வீதி அடிக்கத் தொடங்கினர்கள். தோழர் முத்துவும் அவர்களில் ஒருவரானர்.

தோழர் முத்து 1947-ல் பேராசிரியர் அன்பழகன் தலைமையில் **தோழியர் ரஞ்சிதம்** அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். இன்று அவருக்கு **மாலைமணி** என்ற பெண்மகவு இருக்கிறது.

நம் இயக்கம் ஒரு சிலருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களில் தோழர் முத்துவும் ஒருவர். அவர் ஒருவருடைய பெருமுயற்சிதான் மதுரை நகரையே நம் பக்கம் இழுத்து வைத்திருக்கிறது. தோழர் முத்து நல்லவர், எளியவர்களுக்குத் தோழர்......துணைவர்......ஆதரவாளர் எல்லாம். தவிர்க்கமுடியாத துயர் வந்துற்ற போதிலும் பணத்துக்குப் பணியாதவர்.

சீமான் அல்ல! அன்ருட வாழ்வு நடத்த உழைக்க வேண்டியவரவர். அந்த நிலையில்கூட நம் இயக்கத்தை அதிபயங்கரமான இடத்திலே உருவாக்கியிருக்கிருர். எதிரிகளுக்கு ஓர் அணுகுண்டு...இயக்கத்தினருக்கு மலர்ச்செண்டு!

தொண்டர்... பேச்சாளர்... அமைப்பாளர்... செயலாளர்.....இத்தனை வேலைகளும் செய்து வருபவர் தோழர் முத்து. நாம் தேடி யெடுக் காமல் தானே கிடைத்தவர் அவர்.

முத்து! அதை நாம் அணிந்திருக்கிருேம். முத்து! இயக்கத்தின் மாண்பு அதற்கு ஒளி தந்திருக்கிறது.

இயக்க வாழ்வில் சுகம் தேடி ஏமாந்த இனம் கெட்டவர்களின் எதிர்ப்புக்கிடையே மாவட்ட மாநாட்டை அணிமையில் மதுரையிலே சிறப்புற நடத்தி, முத்து பெற்ற மகத்தான வெற்றி அந்த முத்துவுக்கு ஒளிக்கற்றைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. ஏப்ரல் 10-ல் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் தேர்தலிலே முத்துவுக்குப் போட்டியில்லை. மகிழ்ச்சி தரக்கூடிய சேதி இது! திருச்சியில் நடைபெறப் போகும் இரண்டாவது மாநில மாநாட்டுக்கு, ஏப்ரல் 24-ல் சென்னையில் கூடிய பொதுக்குழு தேர்ந்தெடுத்த இரு செயலாளர்களில் ஒருவர் தோழர் முத்து, என்கிறபோது இயக்கத் தொண்டினை ஆர்வத்துடன் மேற்கொள்ளும் தோழர்களின் உள்ளம் சிலிர்க்கத்தான் செய்கிறது. சிலிர்க்கட்டும்! அந்த சிலிர்ப்புக்கு இலக்கான அந்த இலட்சியவாதியை வாழ்த்துவோம்!

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

26

அந்தக் கடிதத்தில் இருந்தது இது.

அன்புள்ள அண்ணுவுக்குக் கமலம் எழுதிக் கொண்டது. அண்ணு, களங்கமற்ற உங்கள் மனது கவலைப்படும்படியாக ஒரு சோகமான செய்தியைச் சொல்லப்போகிறேன். தங்கள் அன்புத் தங்கை - என் அக்காள் நான்கு நாட்களாகச் சித்தப்பிரமை பிடித்திருக்கிருள். யாரையும் அடையாளம் தெரியவில்லை. சதா பிதற்றிக் கொண்டிருக்கிருள். நான்கு நாட்களாக நானும் கண்ணீரிலேயே காலத்தைக் கழிக்கிறேன். அத்தானிடம் சொல்லிக் கடிதம் எழுதச் சொன்னேன். இந்தச் சேதியைத் தங்களுக்குத் தெரிவிக்கவே கூடாதென்று ஒரேயடியாக மறுத்துவிட்டார். நானே இப்போது அவருக்குத் தெரியாமல் தபாலாபீசுக்கு வந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன். அக்காளுக்கு வைத்தியம் பார்க்கும் முயற்சிகூடச் செய்யவில்லை அவர். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால்தான் அக்காளை உயிரோடு பார்க்கலாம்.

இப்படிக்குத் தங்கள் தங்கை

கமலம்

—சுந்தரத்தின் நெஞ்சில் வேலாகப் பாய்ந்தது இந்தக் கடிதம். தன் தங்கையின் அளவற்ற துயரத்தை எண்ணி எண்ணிப் பொருமிற்று அவன் இதயம். வசதியான குடும்பத்தில் பிறந்தும், வாழ்விலேயே தங்கைக்கு என்று எண்ணும்போது அவன் மூளை குழம்பிற்று. தலையணையில் முகத்தைப் புதைத்து அழுதான். சாரதை அங்கே வந்தாள். கண்ணீர் விடும் கணவனைக் கண்டாள். என்ன நடந்தது என்று புரியாமல் திகைத்தாள். அறிவறியாப் பிஞ்சுமனம் அத்தானின் கண்ணீருக்கு இளகிக் கொடுத்துத் தானும் அழ ஆரம்பித்தது. படுத்திருந்த கணவனின் அருகிலே உட்கார்ந்தாள் சாரதை தன் இரண்டு கைகளாலும் அவன் முகத்தைத் தூக்கி, ' ஏனத்தான் அழுகிறீர்கள்?'' என்று அறைகுறையாகக் கேட்டாள். பதில் சொல்ல நாவெழவில்லை அவனுக்கு. பயங்கரத் தோற்றம். அவனது முகம் பல கதைகள் சொல்லிற்று அவளுக்கு. காலையில் அழைத்தபோது நான் வரவில்லையே அதற்காக அழுகிருரா? சேச்சே இருக்காது! பிறகு என்ன காரணம்?—''அத்தான், சொல்லுங்கள். அத்தான். என்ன நடந்தது?'' என்று கேட்டாள். சுந்தரம் நிமிர்ந்து உட்கார்ந்தான். பதில் சொல்லாமல் கமலத்தின் கடிதத்தை எடுத்து நீட்டினுன். சாரதை படித்துப் பார்த்தாள். பொல பொலவென்று உதிர்ந்தது கண்ணீர்.

இந்திரா !—அந்தக் குணவதிக்காக எத்தனை பேர் கண்ணீர் வடிக்கிருர்கள்? நல்லவர்களுக்கு எல்லோரும் உறவினர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டிய அந்த உத்தமிக்காக எத்தனை நெஞ்சங்கள் துடிக்கின்றன! மணந்தவன் ஒருவனைத் தவிர மற்ற எல்லோரும் அவளிடம் எவ்வளவு பரிவு காட்டுகிருர்கள்! கொடிய குணம் படைத்த அழகியைக் காட்டிலும் நல்ல குணம் படைத்த குருடிதான் குடும்பத்திற்குஏற்றவள், உயர்ந்தவள் என்பதை இந்திராவுக்கு மாலையிட்டவனைத் தவிர மற்ற எல்லோரும் உணர்ந்திருக்கிருர்கள்.

கன்னியாகவே தன் தங்கை காலம் கழித்திருந்தால் கண்ணீருக்கு இவ்வளவு அதிகக் கடமை இருந்திருக்காது. தனிமை எனும் ஒரு துயரைத் தவிர, தாங்க ஒரு கொம்பில்லையே என்ற ஒரு கவலையைத் தவிர வேறு கவலைக்கு வேலை இருந்திருக்காது. சூடி மகிழ நகையுண்டு. ஆடி மகிழத் தோட்டமுண்டு, பாட்டுக்கேட்க வானெலி உண்டு; படம் பார்க்க வேண்டுமென்ருலும் வாடகைக்குக் கார் எடுத்தாகிலும் கூட்டிப் போக வசதி உண்டு. ஆனல் மண முடித்தால், கணவனுமிருப்பார் இவையனைத்துமிருக்கும் என்று எண்ணினேமே! எவ்வளவு தவறு செய்துவிட்டோம்! மண முடித்ததுதான் முடித்தோமே நல்ல மனம் படைத்த ஒரு ஏழைக்காவது கொடுத்தோமா? ஒரு கல் நெஞ்சக்காரனுக்குக் கட்டி வைத்தோம். அதற்காக அவன் காலை நாமும் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. தங்கைக்காகத்தானே என்று எண்ணி அவனைத் தாங்காத அளவுக்குத் தாங்கினேம். இப்பொழுது தங்கையின் வாழ்வில் இறுதிக் கட்டம் வந்திருக்கிறது. எப்படி இந்தச் சித்தப் பிரமை தங்கைக்குப் பிடித்திருக்கும்? என்ன செய்திருப்பான் பாலன்? பலமாகத் தலையிலே அடித்திருப்பானு? அதிலே மூளை கலங்கி இருக்குமா? கமலம் அதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லையே. ஒருவேளை அதை எழுதினுல் நாம் ஆத்திரப்படுவோம் என்று விட்டுவிட்டாளா ?—என்றெல்லாம் எண்ணித் துடித்த சுந்தரம் அப்பொழுதே போய் சென்னையில் குதித்துவிட விரும்புபவன் போல் காணப்பட்டான். சாரதை அவன் உள்ளக் கிடக்கையை அறிந்தாள். என்ன சொல்லி அவனை அவள் அமைதிப்படுத்த முடியும்? அத்தான் அத்தான் என்று அரற்றுவதல்லது வேறேதும் சொல்ல முடியாமல் அவன் கண்ணீரைத் துடைத்தாள் சாரதை. இந்திரா, இந்திரா என்றே முணகினுன் அவன். திடீரென எழுந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு ''சாரதை; இரு! இதோ மெய்யப்பச் செட்டியார் வீடுவரை போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஓட்டம் பிடித்தான். சாரதை, இந்திராவின் கடிதத்தை மேலாடைக்குள் மறைத்தவாறு கீழிறங்கிச் சென்ருள்.

2

காம நாடகப் படலம்

ஆவின மழை பொழிய,
இல்லம் வீழ
அகத் தடிமையாள் மெய்நோக
அடிமை சாக
மாவீரம் போகுதென்று
விதைகொண் டோட
வழியிலே கடன்காரர்
மறித்துக் கொள்ள
சாவோலை கொண்டொரு
வன் எதிரே தோன்ற
தள்ளவொணு விருந்துவரச்
சர்ப்பந் தீண்ட
....

—தனிப்பாடல்

சென்னையில் இந்திராவின் இல்லம் களை இழந்து காணப்பட்டது. மற்றவர் வருந்தச் சகியாத அந்த மாதரசி சித்தப் பிரமை பிடித்துச் சிரித்துக் கொண்டே இருந்தாள். பாலன்

பகலிலே வீட்டுக்கே வராமல் அலுவலகத்திலேயே தங்க ஆரம்பித்தான். இரவு ஒரு மணிக்கு வந்து காலை ஆறு மணிக்கெல்லாம் - இந்திரா விழிப்பதற்கு முன்னே எழுந்து வெளியிலே சென்றுவிடுவான் ஏதோ ஒரு பயங்கரமான குற்றத்தைச் செய்துவிட்டவன் போலக் காணப்பட்டான். அக்காளின் சித்தப் பிரமைக்கு அத்தான் தான் காரணமாயிருக்கும் என்று ஓரளவு புரிந்துகொண்டிருந்தாள் கமலம்.

அன்றிரவுஅன்போடு பாலூட்டினார் அத்தான். அந்தப் பால்... ....அதிலே........ஆம், அப்படித்தான் ஏதாவது இருக்கும். கமலம் கணைபட்ட புறுவாக இந்த எண்ணத்தில் துடித்தாள். அன்றிரவு அக்காள் அமைதியாகத் தூங்கினளே அவள் விடியுமுன்னே விழிக்கமாட்டாள் என்ற தைரியத்தில்தானே ஒரு வேளை அத்தான் அன்று... ....?—கமலம் முகத்தைக் கைகளால் புதைத்துக்கொண்டு அழுதாள். மிருகங்களுக்குக்கூட ஓரளவு, மனப்பக்குவம் உண்டு. காம நோய் பற்றியவன், மிருகத்திலும் கடை கெட்ட மிருகம்—இந்திரா மட்டும் இல்லையென்றால் கமலம் அப்போதே பாலனைக் குத்திக் கொன்றிருப்பாள். அக்காளுக்காகப் பொறுத்தாள். இப்போது அமைதி இழந்து தவிக்கிருள்.

—சமயலறையில் உட்கார்ந்திருந்த கமலத்திற்கு இந்திராவின் சிரிப்புச் சத்தம் கேட்டது. பொங்கி வழிந்த கண்ணீரோடு எழுந்து, அக்காளிருந்த அறைக்குள் வந்தாள் கமலம். இந்திரா விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள். இந்தக் கேடு கெட்ட மனித சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் பிளப்பதற்கு ஒவ்வொரு சிரிப்பெனும் வகையில் ஓயாது சிரித்தாள் இந்திரா.

இவள் தாயென்றும், இவள் தங்கையென்றும், இவள் தாரமென்றும், தாய் அன்பு செலுத்துவாளென்றும், தங்கை பாசம் காட்டுவாளென்றும், தாரம்தான் காதல் தருவாளென்றும் இதுதான் மனித சமுதாயத்தின் வாழ்க்கை விதியென்றும் இதை மீறுகிறவன் ஆறும் அறிவு அணுவளவும் இல்லாதவன் என்றும் பகுத்து வைத்திருக்கிருனே மனிதன், பாலனைப் போன்ற வெறி பிடித்தவர்களை அங்கங்களாகக் கொண்ட ஒரு சமுதாயத்திற்கு இந்தப்பாகுபாடு எதற்கு? நரைத்துப்போன முதியவர்கள், நடுத்தர வயது ஊஞ்சல்கள், கட்டுக் குலையாக் காளையர் அத்தனைபேருக்கும் காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வல்லமை இல்லையென்றால் ஒரு சமுதாயம் சோடி சேர்ப்பதற்கு விதி வகுத்துத்தான் என்ன பயன்? காட்டுமிராண்டிக் காலத்தைக் காட்டிலும் நாகரிகத்தில் தான் வெகுவாக முன்னேறிவிட்டதாக மனிதன் பெருமைப்படுவதற்கு என்ன நியாயமிருக்கிறது? புலிக்கும், புறுவுக்கும்கூட காம உணர்ச்சியிலே நாகரிகம் உண்டு. மனைவியின் தங்கையை முகம் திருப்பிப் பார்க்காத பண்பாடு உண்டு. சொல்லப் போனால் இருபதாம் நூற்றுண்டின் நாகரிக மனிதன் இரண்டாம் நூற்றுண்டின் மிருகங்களைவிட இழிந்தவன். அவனது சமூக ஒழுங்கு சட்டமாக இருக்கிறது. எழுத்துக்கள் அவன் இப்படி இருக்கவேண்டுமென்று சொல்லுகின்றன. படித்தவர்கள், அதைமேடை அதிரப் பேசிக் காட்டுகிருர்கள். எழுதுபவர்கள் அணு அணுவாக விமர்சனம் செய்கிருர்கள். 'என் மூதாதைகளுக்கு இவ்வளவு பெருமையுண்டு' என்று இடைவிடாது எடுத்து இயம்புகிருன், தன் வாழ்வைச் சாக்கடையில் முக்கி எடுத்தவன்கூட. போலித் தனத்திற்கு மரியாதை ஆர்ப்பாட்டத்திற்கு வரவேற்பு, வெற்றுவேட்டுக்குக் கைதட்டல், வாய் முழக்கத்திற்கு மலர்மாலை. வரண்டுபோன தொண்டைக்கு ஒரு சோடா—வேடம் போடுபவனை முன்னுக்குக் கொண்டு வருவதிலே விளக்கம் பெறாத கூட்டத்திற்கு எவ்வளவு உற்சாகம்! மனிதன் அபார நடிகன். செயலைச் சொல்லாலே மறைப்பதிலே அவனுக்குப் பெருந்துணை புரிகிறது பேச்சுத்திறமை. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்று சொல்லிக் கொண்டே மது குடிப்பான். புகை பிடிப்பது தீது என்று பாடிக்கொண்டே புகை விடுவான். காமம் நரகத்தில் தள்ளும் என்று சொல்லிக் கொண்டே இடம் தேடுவான். பெண்ணுகை வந்தொரு மாயப் பிசாசம் என்று பாடும்போது அவன் மடியிலே ஒரு பெண் இருப்பாள். சொல் வேறு செயல் வேரு என்று கேள்வி கேட்டால், சொல்வது வாய், செய்வது கை என்று தத்துவ ரீதியில் பதில் சொல்லுவான். பகுத்தறிவு வரப் பெற்ற ஒரு கூட்டம் மட்டும் இல்லாமலிருக்குமானல் இந்தச் சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் ஆடை அணிவதையே விட்டொழித்திருப்பார்கள். அறிஞர்கள் சிலர் தோன்றினர்கள். சமுதாயத்தின் ஒரு அங்கம் பழுதுபடாமலிருக்கிறது பாக்கி அங்கங்களிலுள்ள பரிதாபத்திற்குரியவர்கள் அதை நம்பியே உயிர் வாழுகின்றனர்.

அறிவு தெளியாத கூட்டத்திலே பாலனும் ஒருவன். அவனுக்குத் தேவை கமலம். அந்த மீனைப்பிடிப்பதற்குத்தூண்டிலில் போடப்பட்ட இரைதான் இந்திரா. இதுதான் பாலனின் சித்தாந்தம். தன் பொருட்டு இந்த உலகமே அழிவதானாலும் அவனுக்குச்சம்மதம்தான். சிறிதளவு வளைந்து கொடுக்கிற இரக்க மாறுலுங்கூட நிறைந்த சுகம் கிடைக்காது என்பதைத் தனது குறுகிய கால அனுபவமாகக் கொண்டிருந்தானவன். கமலத்தை மண முடிப்பது எப்போது? நாம் காதல் உலகில் களிப்பதுஎப்போது? காலதாமதமாகுமானல் வாலிபம் என்னுவது? என்றெல்லாம் சிந்தித்து கமலத்தை எப்படியும் பிடிந்து விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டிருந்தான் பாலன். அந்த ஆசை அவனுக்கு வரக் காரணமாயிருந்த இந்திரா தானே பலியாகக் கூடிய நிலைமைக்கு வந்தாள்.

அன்று இரவு!

பாலன் நிலை கொள்ளாமல் தவித்தான். இந்திரா கமலத்தைப் பக்கத்திலேயே படுக்க வைத்துக் கொண்டு தூங்குவாள். தன் கணவனிடத்திலே அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு. பாலனுக்கு இந்தக் காட்சி வெறுப்பைத் தந்தது. அவன் திட்டம் வேறு. அதற்கு இந்திரா இடையூறு. நான்கு இரவுகளைத் தூங்காமல் கழித்துவிட்டான். அது நாலு யுகங்களாகத் தோன்றிற்று. அன்றிரவு, அவன் ஒரு முடிவுக்கே வந்திருந்தான். கொஞ்சம் தூக்க மருந்து வாங்கி வந்தான். 'பருகு கண்ணே, பருகு!' என்று பாசத்தோடு இந்திராவுக்கு ஊட்டினன் "பால் கொடுக்கிருரே அத்தான், அக்காளிடம் பரிவு காட்டுகிருரே அத்தான். அருகில் உட்காருகிருரே அத்தான். அன்பாகப் பேசுகிருரே அத்தான். வாழட்டும்! அக்காள் வாழட்டும்!" என்று கசிந்துருகி மகிழ்ந்தது கமலத்தின் சின்ன மனது. அத்தான், அக்காளுக்குப் பால் கொடுத்தது, தன்னைப் பாழ்படுத்தும் திட்டத்தின் முதற்படி என்பதை அறியாமல் இருந்தது அந்தப் பக்குவமற்றபிஞ்சுமனம். அக்காளும் அத்தானும் அந்திருந்த காட்சியைக் கண்டு நெக்குருகி நின்ருள் கமலம். இந்திராவைப் பாலன் தன் மார்பில் சாய்த்துக் கொண்டபோது இனி இல்லை துன்பம் என்று எக்காளமிட்டாள் கமலம். சாய்ந்த இந்திராவின் கண்கள் தூக்கத்திற்காக மூடியபோது தன் வாழ்விலே பயங்கரமான புதிய பாதை திறக்கப் போகிறது என்பது கமலத்திற்குத் தெரியாது.

தொடரும்

திருச்சி நகரசபையில்

வரவேற்பு

தி. மு. கழகப் பொதுச்செயலாளரும், இரண்டாவது மாநில மாநாட்டுத் தலைவருமாகிய திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு திருச்சி நகரசபை சார்பில் வரவேற்பு அளிப்பதென்று 7-5-56 மாலை நடைபெற்ற திருச்சி நகரசபைக் கூட்டத்தில் ஒரே மனதாக முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

16-5-56 புதன்கிழமைஅன்று வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்படும்.

ஜூன் 12உ இதழில்

கண்ணதாசன்

எழுதும்

புதிய தொடர்கதை

மனம்போல வாழ்வு

உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர், நன்ருக அறிந்த ஒரு அற்புதமான சம்பவம்!

தேவையான பிரதிகளுக்கு ஏஜண்டுத் தோழர்கள் முன்கூட்டியே அறிவிக்கவும்.

★

தேன்றல்

மௌண்ட் ரோடு : : சென்னை - 6.

உலகம் பலவிதம்

உலகத்தில் சிலர் தங்களைப் பெரிய மேதாவிகள் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். அதிலும் குறிப்பாகக் காங்கிரசுக் கட்சியில் உள்ள 'சாதாரணங்'கள் கூட தங்களைத் திறமைசாலிகள் என்று தப்புக்கணக்குப் போட்டுக் கொள்ளுகின்றன. தங்கள் கருத்துக்கள், அகிலத்துக்கே 'டிம் லைட்'டாகப் பயன்படும் என்பது அந்த வெத்து வேட்டுகளின் நினைப்பு. சாதாரணங்களே அப்படி என்றால் தலைமைப் பீடத்தில் உள்ளவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் தேபரைப்பற்றி நினைக்கும்போது மேற்சொன்ன கருத்துத்தான் நமக்குத்தோன்றுகிறது அவர் சமீபத்தில் கோவில்பட்டிக்கு வருகை தந்திருந்தபோது சில தோழர்கள் அவரிடம் 'ஆட்டோகிராப்' கேட்டுள்ளனர். அந்தத் தோழர்கள் தேபரிடம் என்ன எண்ணத்துடன் 'ஆட்டோகிராப்' கேட்டார்களோ நமக்குத் தெரியாது. ஆனால், தேபர் ஒரு சிலருக்கு ஆட்டோகிராப் தந்துள்ளார். அந்த ஒரு சிலர் கதர் அணிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் பலருக்கு அவர் ஆட்டோகிராப் தர மறுத்துவிட்டார். காரணம் அவர்கள் கதர் அணியவில்லையாம்.

''கதர் அணிந்தவர்களுக்குத்தான் நான் ஆட்டோகிராப் போடுவேன்'' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் அவர். தேபரின் இந்தப் பேச்சு நமக்கு வேடிக்கையைத்தான் தருகிறது. உள்ளங்களைப்பற்றிக் கவலை இல்லை! உடையைப் பற்றித்தான் கவலை அவருக்கு! வேஷத்தைக் கண்டு மதிப்புத் தர வேண்டும் என்கிற வீணர்கள் காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் இருக்கிறார்கள்.

காந்தியார்கூட, ''தாழ்த்தப்பட்டோரின் நிதிக்குப் பணம் தந்தால் கையெழுத்துப் போடுவேன்'' என்று சொன்னாரே தவிர, கதர் அணிந்தால்தான் கை எழுத்துப் போடுவேன் என்று சொல்லவில்லை. ஆனால் தேபரோ கதர் அணிந்தால் போதும், கையெழுத்துப் போடுகிறேன் என்கிறார். கேவலம் அவரது ஆட்டோகிராபுக்காக எவரும் கதர் அணிந்து வருவார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் யாராவது ஒரு குறும்புக்காரர் கதர்ச்சட்டை அணிந்துகொண்டு தேபரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, பின்னர் அந்த இடத்திலேயே - அவருக்கு முன்னாலேயே தான் அணிந்துள்ள கதர்ச்சட்டையைக் களைந்து எறிந்தால் தேபர் என்ன செய்து விடுவார் என்பது புரியவில்லை. உலகத்தில்இப்படிப் 'பிரகிருதிகளும்' இருக்கத்தான் செய்கிறார்கள். இந்தக் காங்கிரஸ் ஆட்களிடம் மக்கள் ஆட்டோகிராப் கேட்க வருவதே அதிசயத்திலும் அதிசயம். அப்படியிருக்க, தேடி வந்தவர்களை விரட்டிவிட்ட விபரீத புத்தியுள்ளவராக இருக்கிறார் தேபர். வருகிற வாய்ப்பை நழுவ விடாதீர் என்று அவரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

★

பொதுவாக நாட்டில் ஒரு சிலர் தாங்கள் எதைப்பற்றிப் பேசினாலும் சரி அதைத் தங்கள் கருத்துக்கு இழுத்துவர முயல்வதை நாம் அடிக்கடி பார்க்கிறோம்; கேட்கிறோம். அந்த 'மகானுபாவர்கள்' பட்டியலிலே கனம் ராஜாஜியை முதன்மையாகச் சேர்க்கலாம். அவரது கண்ணுக்கு யாரைப் பார்த்தாலும் ரிஷியாகத்தான் தெரியும். இந்து மதத்துக்கு வைரியாகத் தோன்றிய புத்தர்கூட அவர் கண்களுக்கு ரிஷியாகத் தென்படுகிறார். ராஜாஜி அவர்கள் தம்மைத் தாமே ரிஷி என்று சொல்லிக் கொண்டாலும் ஆச்சரியமில்லை. ஏனென்றால். அவரது அத்யந்த சீடர் மறைந்த 'கல்கியார்' ''மகான் வந்தார்; மழை பெய்தது'' என்று எழுதி அவரை மகானாக ஆக்கியுள்ளாரல்லவா?

சமீபத்தில் புத்தர் ஜயந்தியை ஒட்டி அகில இந்திய வானொலியின் புது டில்லி நிலையத்திலே 'தம்ம சக்கரம்' என்ற வரிசையில் ராஜாஜி அவர்கள் திருவாயைத் திறந்திருக்கிறார்கள்.

இந்து மதமும் வைஷ்ணவ மதமும் செய்த பித்தலாட்டங்களால்தான் புத்த மதம் தோன்றியது. புத்தர் செல்வாக்குப் பெற்றார். மக்கள் அவரைப் பின்பற்றினர். ராஜாஜிக்கு இது தெரியாததல்ல. தெரிந்திருந்தும் கருத்தை மாற்றிப் பேசுவது கண்டு நாம் அவர் மீது ஆத்திரம் கொள்வதைவிட அனுதாபப்படுகிறோம்.

''மெய்ஞானத்தை யுணர்ந்த-- போதித்த இதர ரிஷிகள் முனிவர்கள் வரிசையில் புத்தருக்குரிய இடத்தை உறுதிப்படுத்திவிடுவதுதான் இந்தியா கௌதம முனிக்கு 2500 ஆண்டுகட்குப் பின் செலுத்தக்கூடிய பாராட்டு'' என்று பேசியிருக்கிறார். யாரை ரிஷி, என்று சொல்வது என்பதுகூட 'மாம்பலத்து மாமுனிவருக்கு' மறந்து போய்விட்டது போலும். பாவம்!

ஆனால், அதே விழாவிலே பேசிய டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்ன கருத்தை ஓரளவு பாராட்டத்தான் வேண்டும்.

''உலகத்தில் பகுத்தறிவு வாதி என்று யாரையாவது கூறலாமென்றால் அது புத்தர் தான்; அவரைவிடச் சிறந்த பகுத்தறிவு வாதி கிடையாது.'' புத்தரைவிடச் சிறந்த பகுத்தறிவு வாதி உண்டா இல்லையா என்பதை விட்டுவிடலாம். புத்தர் பகுத்தறிவு வாதி என்று அவர் சொல்வதை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

ஒரே கூடாரத்தில் உள்ள ஒருவர் புத்தரை 'பகுத்தறிவு வாதி' என்கிறார். மற்றொருவர் 'ரிஷி' என்கிறார். இருவரும் இரு துருவங்களில் இருக்கின்றனர். உண்மைக் கருத்தைச் சொல்பவர்களிடையே ஒடிந்து போன கருத்துக்களை, - ஒவ்வாக் கருத்துக்களைச் சொல்கின்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்! அவர்கள் என்றுதான் திருந்துவார்களோ?

★

ருசி கண்ட பூனை உறியை உறியைச் சுற்றுமாம். நமது மாநிலத்து அமைச்சர்கள் ''ருசி கண்ட பூனையாகத்தான் இருக்கிறார்கள். ஒருமுறை அவர்களுக்கு அரசியலில் பதவி கிடைத்துவிட்டால் அந்தப் பதவி அவர்கள் ஆயுட்காலம் வரை இருக்கவேண்டும் என்று அந்த மகானுபாவர்கள் நினைக்கிறார்கள். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது இந்தப் புண்ணியாத்மாக்கள் விஷயத்தில் பொய்யாகிவிடுகிறது. சமீபத்தில் அறநிலைய மந்திரி ராமசாமிப் படையாச்சி சென்னையில் ஓர் இடத்தில் பேசியது மேற்கண்ட பூனையின் செயலைத்தான் நமக்கு நினைவூட்டுகிறது.

மந்திரி பதவியை விட்டுப் போகவே அவருக்குப் பிடிக்கவில்லையாம். முன்பு ஒருமுறை மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்து விருந்தளித்ததைஅவரால்மறக்கவே முடியவில்லையாம். அந்த விருந்திற்காகவாவது தான் மற்றொரு முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமாம். அமைச்சர் பேச்சின் சாரம் இது.

உண்மையிலேயே சாப்பாட்டு எண்ணத்தால் பதவி நீடிக்க விரும்புகிற பேராளர்களை எண்ணும்போது நமக்குச் சிரிப்பு வருகிறது. ''நாங்கள் இன்னின்ன நல்ல காரியங்களைச் செய்தோம். அதனால் எங்கள் பதவியை நீடிக்கச் செய்யுங்கள், அதாவது மறுமுறை தேர்ந்தெடுங்கள்'' என்று சொன்னால் அதை ஓரளவு ஒப்புக்கொள்ளலாம். தானே மந்திரி சபையில் இருக்கவேண்டும் என்று ஒருவர் எண்ணினால் அந்த எண்ணத்தில் பொதுத்தொண்டைவிடச் சுயநலம் தான் அதிகம் கலந்திருக்கும். ஆனால் இந்த மந்திரியோ, ஒரு தொண்டும் செய்யாமல்-மக்களுக்கு உருப்படியான பயன் ஒன்றும் தராமல் ''மக்களே என்னையே மறுமுறையும் தேர்ந்தெடுங்கள்'' என்று சொல்வது கொஞ்சங்கூடப் பொருத்தமில்லாத செயலாகும். தேர்தல் நெருங்க நெருங்க இவர்களுக்கெல்லாம் 'அஸ்தியில் ஜுரம்' காண ஆரம்பித்துவிட்டது. பாதகம் இல்லை! அந்தமட்டுக்காவது பயம் ஏற்படுகிறதே! அதைப் பற்றி நமக்கு மகிழ்ச்சிதான். இருந்தாலும் விருந்தை நினைத்துப் பதவி தேடும் விநோத மனிதர்களைக் காணும்போது நம்மால் பேசாமல் இருக்க முடியவில்லை. மந்திரி சபைக்கு விவேகத்தில் நாட்டம் உள்ளவர்கள் வருவதுதான் நல்லது. விருந்து விரும்பிகளால்,நாடும் சரி,மக்களும் சரி வலிவடையவும் முடியாது; பெருமையடையவும் முடியாது. இதை அமைச்சர்களைவிட நமது மக்கள் தெரிந்துகொண்டால் போதும், இந்தப் போலி வேடதாரிகள் இனியும் ஆதிக்கம் பெற முடியாது.

—தமிழ்ப்பித்தன்.

தேதி மாற்றம் கவனிக்க !

தென்றல்

மாநில மாநாட்டு மலர்

—ஏராளமான தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாநில மாநாட்டு மலர், மாநாடு முடிந்ததும், 29-5 56உ யன்று வெளிவரும். தென்றல்-திரை புகைப்பட நிருபர் சி, என். சாமுவேல், மாநாட்டில் எடுக்கும் படங்களோடும், மாநாடு பற்றிய குறிப்புகளோடும் வெளிவரும். பதினாறு பக்கங்கள் படங்களாக இருக்கும்.

— விலை அணா 8 தான் —

போதுச் செயலாளர்—து. போ. செயலாளர் — அறிஞர் அண்ணா — புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., நடிகர் எம். ஜி. சக்ரபாணி—காஞ்சி கல்யாணசுந்தரம், தென்னரசு—தமிழ்ப்பித்தன் மற்றும் பலர் எழுதுகிறார்கள்.

சுறுசுறுப்பான தலைமை நிலையம்—(கட்டுரை)

'கண்ணதாசன்' எழுதும்

பாண்டிமாதேவி, கழகமாகாவியம், இலக்கியத்தில் காதல், மாநாடும்-தமிழ்நாடும்

உள்ளே மூவர்ணப்படம் - மூவர்ண அட்டை

ஏராளமான படங்கள்.

தென்றல் :: சென்னை-6.

புலிக்கொடி ...

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

"போய், வருகிறேன், மீண்டும் !" என்றீர்கள். திங்கள் ஆறு கடந்தது. இங்கே என் வாழ்வு திசை மாறி நடந்தது......நீங்கள் வராமலே இருந்திருக்கக் கூடாதா? ஏன் என்னை இப்படி வதைக்கிறீர்கள் ?" -அவள் நாகுழறியது.

"வாள்விசயராயர் ! வாள்விசயராயர் !" என்று முணு முணுத்தான் சேதிராயன்.

"ஆம் ! அவர்தான் ! அறுபதைக் கடந்து, மூப்பின் பிடிப்பிடியிலே சாக்காட்டை எதிர்நோக்கும் அவர்தான் ! பருவத்தின் முதற்படியில் நான்; பாடத்தை முடிக்கும் பருவத்தில் அவர்-என்னைக் கைப்பிடித்தவர் ! திருமணம் முடித்ததைத் தவிர, தீண்டவும் சக்தியற்றவர் ! நிறைவேருத காதல் வேதனை; நிறைவேறிய பொருந்தாமணத்தில் நீடிக்கும் வேதனை-எத்தனை வேதனைகளைத்தான் தாங்குவாள் ஒருத்தி ! சேதி !...என்ன பெயரிட்டழைக்கிருளே என்று திகைக்கிறீர்களா ? இனி வேறு எப்படி அழைப்பேன், உங்களை? கேளுங்கள் என் கதையை: அனுபவிக்க வேண்டிய சுகம், நினைவிலே கோடி கோடி. அந்த ஆசையை வளர்த்தது நீங்கள். ஆனல் ஆளவந்தவரோ முதிர்ந்த பருவத்தினர். இருமல் வரும்போது பணிக்கம் எடுத்து நீட்டவும், எழுந்து நிற்கும்போது கைக்கோல் எடுத்துத் தரவும் துணை ஒன்று வேண்டும் என்ருராம் அவர். பொன் படைத்தவர்; அரசவையில் செல்வாக்குள்ளவர். வேலையாள் வைத்துக்கொள்ள யோசனை கூறினுரா என் தந்தை? "என் மகளிருக்கிருள்; மணமுடித்துத்தருகிறேன்!" என்று கூறிவிட்டு வந்தார். முடிவு, நான் சிறைப்பட்டேன் ! அறுபது இருபதை மணந்தது, அரசரின் முன்னிலையில் ! அநியாயம், அதிகார பூர்வமாக நடந்தது. "தொட்டால் துவளும் இளமை; அதைத் தூக்கி நிறுத்தும் ஆண்மை; கட்டிப் பிடிக்கும் வலிமை; கிட்ட இருத்திக் கிளற்றுமொழி பேசும் இனிமை" என்றெல்லாம் பாட்டு மொழியில் பல பல கூறுவீர்களே, அது கனவாக முடிந்தது. மாலை சூடிய மணவாளர்; அந்தியில் தனியிடத்து இருந்தார். நான் தள்ளப்பட்டேன் அவர்பால் அருகில் அமர்ந்தேன். இருமி இருமிப் பேசினுர். நடுங்கும் கைகளோடு தொட்டார். வலிவற்ற கரங்களின் அணைப்பு, பருவப் பெண்ணுக்கு என்ன சுகத்தைத் தரமுடியும் ? கண்ணீரில் ஆடினேன் நான்; காரிருள் பறந்து பொழுது விடிந்தபோது என் பெண்மை நலம் பிசகாமலேயே இருப்பதைக் கண்டேன் ! ஐயோ ! என்ன சொல்வேன், சேதி ! இன்னும் நான் கன்னிதான் ! ஏன், இனிச் சாகும்வரை, கன்னிதான் ! தாலி இருக்கிறது கழுத்திலே, நான் ஒருவரின் தாரம் என்பதற்கு அடையாளமாக ! அதைத் தவிர வேறு சுகம் இனி எனக்கு ஏது ?......"- பொறுமிப் பொறுமிப் பேசினுள், தேன்மதி.

சேதிராயன் கண்கள் குளமாயின. மேனி நடுங்கிற்று. துடித்த நாவைத் தூக்கி நிறுத்திக் குழறினுன்.

"தேன்மதி ! உன் வாழ்வு கெட நான்தான் காரணம். பிரிந்தேனே, ஆறுதிங்கள்; பிழை செய்தேன் ! வருந்துவதிற் பயனில்லை. வருவது வரட்டும். இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நீ சரி என்று சொல்; உன்னைச் சோழநாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்..."

தேன்மதி திடுக்கிட்டாள். ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள்.

"பயப்படாதே ! இன்னும் நீ கன்னிதானே, ஏன் பயப்படுகிருய்? மேனியில் மேனி நெருங்காத பெண்ணுக்குத் தாலி ஒரு தடையல்ல. என்ன சொல்கிருய் ?..."

தேன்மதியின் மேனி இளஞ்சூட்டில் மிதந்தது. எண்ணத்தில் இருந்த சுகம், இப்போது அதன் கைவண்ணத்தைக் காட்டிற்று. மார்பு விம்மித் தாழ்ந்தது. அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கட்டழகில் சற்றுநேரம் வட்டமிட்டாள். "சேதி!" என்ருள், மெல்லிய குரலில். அவன் சேதி சொல்ல அருகில் வந்தான். மோதாத மேனிக்கு இது போதாது எனும்படி, வாது வளைத்தது, கொடியை. சேதிராயன் முகம், திங்கட்சுடர் பட்டுக் கொப்புளங்கொண்டது. புத்தம் புதிய உதடுகள் முத்தக்கரை பேசின.

—கதவு திறந்தே கிடந்தது.

—காதலர் பறந்தனர்.

—நாட்டு வெளியில் அவளை நிறுத்தி மீண்டும் கடப்பைநாட்டுக்கு வந்த சேதிராயன், திருக்காளத்தி தேவனைச் சந்தித்து, திறைப் பொருள் பற்றிப் பேசினுன். பத்து நாளில் அனுப்புவதாகப் பக்குவமாகப் பதில் சொன்னுன், திருக்காளத்தி தேவன். மற்ற நேரமாயிருந்தால் தட்டிக் கேட்டிருப்பான், சேதிராயன். காட்டு வெளியில் காதலி நிற்பதாலே கேட்ட பதிலே போதுமென்று பறந்தான்.

ஒரே குதிரை இருவரைச் சுமந்தது. வீரர்களுக்குக் குதிரையிலே காதல் புரிவது ஒரு கலை. சேதிராயன், வீரன் ! செங்கோல் வளைக்கை துவண்டது; சிற்றிடை காற்றிற் கரைந்தது. தங்கச்சிலையாம் மேனியும் தளிர்க்கொடி போலப் புரண்டது. வீரனின் கைகள் தாவின. விளையாட மெல்ல மேவின. "ஊர் வந்துவிட்டது !" என்ருள். அவன் ஒப்பி மெல்லச் சிரித்தான்.

வீட்டுக்கு வந்தனர், காதலர், வெளியினில் நின்ற தங்கை, பாட்டுக்கு மொழியெடுத்த அந்தப் பாவையைத் தன் அண்ணனுடன் கண்டாள். "யார் இது ?" என்ருள். "உன் அண்ணி !" என்ருன். "எண்ணினேன் !" என்ருள், தங்கை. புள்ளிமான்போலத் துள்ளிக் குதித்து உள்ளே ஓடினுள். மலர் கொண்டுவந்து தூவினுள். "வாருங்கள் உள்ளே !" என்ருள். காதலர் நடந்தனர்.

தங்கையின் மகிழ்வு தாங்காத மகிழ்வாயிற்று ! கடப்பைக்கன்னி, புலிக்கொடி மண்ணுக்கு மருமகள் !- எண்ணி எண்ணி முன்னும் பின்னும் ஓடி, "அண்ணி ! பார்த்தாயா ! இது எங்கள் கலைக்கூடம். இது அடுக்களை ! இதுதான், பள்ளியறை. அண்ணன் தனியிடம். இனி உனக்கும் அவர்க்கும் பொது இடம்." என்று பேசிக்கொண்டே இருந்தாள்.

மன்னரைப் பார்த்துவரப் போனுன், சேதிராயன். பெண்டிர் இருவரும் பேசித் தீர்த்தனர். சட்டென அண்ணியின் கழுத்தைப் பார்த்தாள், தங்கை. தாலி ! "ஏது அண்ணி, இது ?" என்ருள். அண்ணி சிரித்தாள்.

"அண்ணன் போட்டாரா ! அதற்குள் எங்கே வாங்கினுர்."-புரியாத தங்கையின் கேள்வி இது.

தேன்மதி, தாலியைப் பார்த்தாள்; பெருமூச்சு விட்டாள். மௌனியானுள். தங்கை விடவில்லை. கேள்விமேல் கேள்வி தொடுத்தாள். என்ன இருந்தாலும் கணவனின் தங்கை, சொல்லாமல் முடியுமா? சொன்னுள், தேன்மதி. தன் சோகக் கதையை முழுசாகச் சொன்னுள். நாத்தியின் கண்ணீரில் நாலு சொட்டு தனக்காக அவிழும் என எண்ணினுள். நாத்தியின் கண்களைக் கவனித்தாள், கதையை முடித்தபடி.

அந்தக் கண்களிலே கண்ணீர் இல்லை. கனல் பறந்தது.

"பிறன் மனைவி ! பிறன் மனைவி!" அவள் நா துடித்தது. மேனி கொதித்தது.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தாள், தங்கை. சேதிராயன் நின்ருன். படபடவென உள்ளே ஓடினுள், தங்கை. பளிச்சிடும் வாள் !-எடுத்தோடி வந்தாள். கதறினுள் தேன்மதி. திடுக்கிட்டான் சேதிராயன். பேசவில்லை, தங்கை. வீசினுள், வாளை ! சேதிராயன் தலை துண்டாயிற்று ! தேன்மொழி 'ஓ'வென்றலறி அழுதாள். சேதியின்மீது விழுந்தாள். மறுவெட்டு ! அவள் தலையும் தனியாயிற்று !

தங்கை வாளைக் கீழேவைத்தாள்.

எழுந்தாள்.

துணிகொண்டு வந்தாள்.

ரத்தத்தைத் துடைத்தாள்.

"இந்த மண்ணிலே இந்த ரத்தம் கிடக்கக்கூடாது" என்ருள்.

வெளியிலே வந்தாள்.

கோட்டையை நிமிர்ந்து பார்த்தாள்.

புலிக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது !

மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்

நாடக நூல்கள்

கண்ணதாசன் எழுதியது

ராஜ தண்டனை

மெல்லத் தவழ்ந்து மென்காற்றில் மிதந்து வரும் தென்றல் நடை நாடகக்கருவூலம் ... ரூ. 2 0 0

தென்னரசு எழுதியது

சந்தன மழை

புத்தன் சரிதம் — புதிய கண்ணேட்டம், புதுவெள்ளத் தமிழோட்டம் ... ரூ. 1 0 0

தேவாலயம்

நீகழ்ச்சிப் பின்னல்—புதியதோர் பாதையில் எழுதப்பட்ட நாடகம். இதுவும் தென்னரசு எழுதியதே ... ரூ. 1 4 0

இவை மூன்றும் அருணேதயம் வெளியீடுகள் !

அருணேதயம் : சென்னை - 14.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"
—பாரதியார்

தென்னகத்து மேடைதோறும் வெற்றி முரசு கொட்ட வரும்

கொள்கை விளக்க ஓவியம் !

கொஞ்சு தமிழ்க் காவியம் !!

கலைஞர் மு. கருணாநிதி

எழுதிய

மணிமகுடம்

நூல் வடிவில் மாநில மாநாட்டில் கிடைக்கும்.

முத்துவேல் பதிப்பகம்,

திருச்சி

வெண்பாப் போட்டி

27. காதல் வெண்பா

வெண்பாப் போட்டி 27-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

பொல்லாத கள்வன்போற் செல்வப் பெருந்தகை
மெல்ல யெனைச்சோலை மேடையிலே-புல்லிப்பின்
சொல்லாமற் செல்கின்றார் தோகையே என்னுயிர்தான்
நில்லாது மெய்யகத்தே நீடு.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

வட்ட மதிமுகத்தில் வண்டு விழியென்று
தொட்டு யிறுகணைத்தார் தோழிகேள்-இட்டமுடன்
கூடிக் கலந்திருக்கக் கண்டு மதியம்போய்
நாடிச் சிறிதே நகும்.

—புரட்சிவேலன், கோத்தகிரி.

★

வஞ்சியேன் என்றவர் வஞ்சித்துச் சென்றதனால்
நெஞ்சு பசலைக்கு நின்றிரங்க-நஞ்சனைவேன்
அஞ்சம்பும் விட்டெறிய அங்கமெல்லாம் பட்டுருவ
விஞ்சுதடி வேட்கை விரிந்து.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

இன்தமிழின் ஏந்தலாம் எந்தனுயிர்க் காதலன்தான்
வந்திலன் இன்னும், வருந்திமனம்-நொந்திட்டேன்
சொந்த மொழிகாக்கச் சொற்பொழி வாற்றிவிட்டு
வந்தளிப்பான் இன்பம் மகிழ்ந்து.

—ந. சுப்பிரமணியன், அரங்கபாளையம்.

★

கண்டோம் களிகொண்டோம் காதலித்தோம் செவ்விதழ்கள்
உண்டோம் உயிர்த்தோம் உணர்வுற்றோம்-ஒண்டொடீ
கண்டிட்டாய் எங்கள் கனிநிலவை, காதலர்க்கு
வண்டார் மலரின் மடி!

—ப. தாமரைச்செல்வன், உடுமலை.

★

மாலையினு மோரிரவி மாண்புடனே தோன்றுமென
சோலையிலே வந்தென்னைச் சேர்ந்திடுவார்-சேல்விழியாய்!
என்னுடலி லின்னுயிரைத் தானிணைத்து இன்பமிட
இன்னுமவர் வாராத தேன்?

—கு. பொன்னப்பன், மேல்மட்டை.

★

ஏதிலார் ஏசிடினும் காதலர்பால் தூதுசொலப்
போதலை மேற்கொள்ளும் பூவாய்! நான்-காதலரை
நோதலைக் கொள்ளாது நுண்ணிடை நூற்றிடச்
சாதலைக் கொண்டனெனச் சாற்று.

—மு. இளமாறன், மதுரை.

★

இன்று முழுநிலவு யான்மட்டும் வானடியில்
நின்று கிடக்கின்றேன் நீயின்றி!-என்றுவரும்,
சாளரத்துத் தண்மதியம் சாய்க்கு(ம்)மதுப் போதையில்நாம்
தோளணைத்துத் தூங்கும் சுகம்?

—மலையன், பந்தாரஅள்ளி.

★

மூக்கில் பொடியின் முடைநாற்றம் வெற்றிலைவாய்
சாக்கடைதா னென்றாலும் சால்தோழி-நீக்கியிவை
அத்தானின் முத்தங்க ளத்தனையும் தேன்சுளையை
யொத்த சுவைதருவ தேன்?

—முருகு, வரகூர்.

★

இன்பம் தருவாள் இணைபிரி யாதிருப்பாள்
துன்பத்தைத் தூரத் துரத்திடுவாள்-நன்முறையில்
அன்புடன் வாழ அறிவுரைகள் கூறிடுவாள்
இன்னமுதைத் தந்திடுவாள் இயைந்து.

—மா. தங்கராசு, மாங்கொட்டாபாளையம்.

பாலை நிலத்துப் பனிமலர்போல் நாள்தோறும்
மாலை மதியத்தில் மாய்கின்றேன்-ஆலைக்
கரும்பானேன் நற்றோழி காதலர் தானென்று
திரும்புவரோ யானறியேன் செப்பு

—து. மு. சின்னசாமி, துறையூர்.

★

கண்மணியே என்னைத்தான் கட்டாய மாய்விலக்கில்
மின்மணியே என்செய்வேன் வேண்டற்க-பெண்மணியே
மெத்த மனதுவைத்து வேண்டாப் பிழைசகித்துச்
சித்தம் மகிழ்ந்தெனைநீ சேர்.

—மு. ப, சங்கரலிங்கம், வடுகபாளையம்.

★

காற்றிடைப் போழாக் கலவி இவளிடை
ஆற்றுங்கால் எய்தும் அளவிலா-ஊற்றின்பம்
ஆயுந் தமிழ்போல் அமிழ்தாகி என்றுமே
ஈயும்யான் வேட்பன ஈங்கு.

—ம. மணி. உடையார்பாளையம்.

★

விற்புருவின் கீழாய் விளங்கும் கயற்கண்சொல்
அற்புதமாம் நற்கதைதான் அஃதென்ன?-பொற்பார்ந்த
தார்மார்ப! நின்மார்பே தஞ்சமென்றாள் பேரமளி
ஆர்ப்பாட்டங் கண்டஞ்சி யே!

—பனை. சண்முகம், நெற்குப்பை.

★

ஊர்ந்த வளர்மதியை ஓடி முகிழ்கவ்வ
சீர்மிகுவிண் மீன்சிரித்தே செப்பமுறும்-தார்மார்ப!
ஊர்மகிழ, ஊடறுக்கும் சோகமெனைக் கவ்விடவோ?
சேர்ந்ததிருப் போதும் திரும்பு.

—அ. பண்பு, குமாரபாளையம்.

★

குலமும் குடியும்வே றுமென்று சேர்ந்தேன்;
நலமும் குணமுமுயர் நாட்டமும்ஒன் றானார்
மலர்க்கார்ங் குழலாளும் செந்தமிழ்க்கார் மேனியனும்
அலர்கேட்டும் சென்றார் அகன்று.

—உ. மீனாட்சிசுந்தரம் பி. ஏ., பி. டி., சொக்கலிங்கபுரம்.

★

தென்றலும் வாரிதியும் தேன்நிலவும் வன்பிகமும்
மென்குழலும் வண்டுகளும் மிக்கவே-என்னுடலைத்
துன்புறுத்தி நிற்றலால் தோகையே எம்கோமான்
தன்னிடம் செல்லாய்நீ தூது.

—கி. சீத்தாராமன், கரிகாலி.

★

கன்னற் சுவைதோற்கும் கன்னித் தமிழ்பேசிக்
கன்னத்தில் கொஞ்சிட்டார் ஈங்கில்லை-கன்னிலவே
செவ்வொளி யாலுன்றன் வெவ்வொளியைத் தோற்கடிப்பேன்
வெவ்வொளியால் வாட்டாம லேகு

—கபா. செ. சிவசுப்பிரமணியன், கரிவலம்வந்தநல்லூர்.

★

மின்னே மிளிர்விளக்காய் நுண்பெயலும் அஞ்சிலனும்
நண்ணி நமக்கின்பம் நல்குமவன்-தண்ணளியின்
மிக்கதோ மேலதோ தாயன்பும் தந்தையொடு
ஒக்கலின் சூழ்கலமும் சேர்ந்து.

—உ. கருணாநிதி, பென்னகர்.

★

வண்ணயிதழ் வெண்மையினால் வண்டுக்கண் தண் சிவப்பால்
எண்ணமே ஈர்க்கும் எழிலரசி!-கண்டேன்உன்
கச்சுத் தளர்ந்துளதால் கார்முல்லை வாட்டத்தால்
இச்சை தணிந்ததிர வென்று.

—'கண்ணம்மா', உடுமலை.

★

வேழந் தனைவேலால் வீழ்த்தும் வரைத்தோளன்
வீழக் குலைத்திடுமாம் வேல்விழிகள்-தோழியென்கண்
கொல்லும் படையெனிலென் கொற்றவன்பாற் சென்றெடுத்துச்
சொல்லடி சொல்லடி சொல்.

—அடைக்கலக்குமுளன், கோவிலூர்.

★

முத்த மழைபொழிந்து சித்தம் குளிர்விக்கும்
அத்தா னெனையேங்க விட்டகன்றார்-நித்தநித்தம்
தேனிலவு தீயாகும் தண்டென்றல் தேளாகும்
யானென்ன செய்வேன்தோ ழி?

நாம்

திராவிட முன்னேற்றக் கழக
2-வது மாநில மாநாடு
திருச்சிராப்பள்ளி

திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள
'வள்ளுவர் நகரில்' 1956 மே 17, 18, 19, 20-ம் நாட்களில் நடைபெறும்.

தலைவர் : **இரா. நெடுஞ்செழியன்**
துவக்குபவர் : **ஜி. பி. சோமசுந்தரம்**
கண்காட்சித் திறப்பாளர் : **என். வி. நடராசன்**
கருத்துரை வழங்குதல் : **தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள்**

நாதசுர இசை : திருவாவடுதுறை இராசரத்தினம்
வில்லுப் பாட்டு : என். எஸ். கிருஷ்ணன்
இன்னிசை : கே. ஆர். இராமசாமி, அனீபா, கஸ்தூரி, செல்வா
நாடகங்கள் : எம். ஜி. ஆர். குழுவினர், எஸ். எஸ். ஆர். குழுவினர்
தி. மு. க. விருது பெறுபவர் : மூவலூர் இராமாமிர்தத்தம்மையார்

நிகழ்ச்சி நிரல் :

17—5—56 வியாழன் :

காலை 9-00-ஊர்வலம் துவக்கம் [திருச்சி சிந்தாமணியிலிருந்து 'வள்ளுவர் நகர்'க்கு]

பகல் 1 - 00 - கொடியேற்று விழா மாநாட்டுத் தலைவர்.

மாலை 1-30 | 4-00 | இடைவேளை

,, 4-00—'புத்தர் வரலாறு' —வில்லுப் பாட்டு: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

,, 5-00—கண்காட்சித் திறப்பு விழா: துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன்

,, 5-30 — இன்னிசை அரங்கு: நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

,, 6-30—நாதசுர இசை அரங்கு: இசைப் பேரும் புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம்.

இரவு 8-00—விருது வழங்குதல்: மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு; அறிஞர் அண்ணா பாராட்டுரை.

,, 8-30 | ,, 10-00 | —இடைவேளை

,, 10-00—'புது வெள்ளம்' நாடகம் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

18—5—56 வெள்ளி :

காலை 7-30 | ,, 8-30 | —பிரதிநிதிகள் கூட்டம்

,, 9-00 இன்னிசை அரங்கு இசை முரசு அனீபா

,, 10-00— ,, இசைச்செல்வி ஜி. கஸ்தூரி

,, 11-00—துவக்கவுரை: தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.

,, 12-00—வரவேற்புரை: தோழர் அ. பெ. தருமலிங்கம்.

பகல் 1-00 | மாலை 3-30 | —இடைவேளை

,, 3-30—இன்னிசை அரங்கு: இசைக் குயில் பி. எஸ். செல்வா

,, 4-30—தலைவரை முன்மொழிதல்

,, 4-45— ,, வழிமொழிதல்

,, 6-00 — தலைவர் முன்னுரை; இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

இரவு 8-00 | ,, 10-00 | —இடைவேளை

,, 10-00—'மணி மகுடம்' நாடகம்; இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

19-5-56 சனி—காலை 9 மணி :

சிறப்புச் சொற்பொழிவுகள் :

1. 'விடுதலைக் கிளர்ச்சிகள்' —கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. 'தொழிலியல் புரட்சி' —காஞ்சி-கல்யாணசுந்தரம்
3. 'உரிமைக் கிளர்ச்சிகள்' —அருண்மொழி பி. ஓ. எல்.
4. 'ஜனநாயகம்' —கி. மனோகரன் பி.ஏ. (ஆனர்ஸ்)
5. 'கல்வித் திட்டம்' —வி. ஜி. இராசையா பி.ஏ.எல்.டி.
6. 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு'—தில்லை - வில்லாளன்
7. 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்' —க. அன்பழகன்.
8. 'தனிநாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்' —என். எஸ். இளங்கோ
9. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' -மு. கருணாநிதி

நண்பகல் 1-30—3.30 இடைவேளை

10. தாய்க்குல வரலாறு' —சத்தியவாணிமுத்து
11. 'மொழிப் பிரச்சினைகள்' —கண்ணதாசன்
12. 'கலையில் கருத்துப் புரட்சி' —சி. பி. சிற்றரசு
13. 'தத்துவ வரலாறு' டி. கே. சீனிவாசன்
14. 'புத்தர் நெறி' —ஏ. வி. பி. ஆசைத்தம்பி
15. 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' —அரங்கண்ணல்
16. 'உலக அமைதி' —ப. உ. சண்முகம்
17. 'மறைந்த இயக்கமாவீரர்கள்' —என். வி. நடராசன்
18. 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' —ஈ. வே. கி. சம்பத்

19-5-56 சனி

இரவு 8-30—10-00 இடைவேளை

,, 10-00 'அட்வகேட் அமரன்' நாடகம்—எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்.

20-5-56 ஞாயிறு :

காலை 7-30 | ,, 8-30 | —பிரதிநிதிகள் கூட்டம்

,, 9-00—தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 | மாலை 3-30 | —இடைவேளை

,, 3-30—தீர்மானங்கள் நிறைவேற்றல்

,, 6-00—அறிஞர் அண்ணா சிறப்புரை

இரவு 7-30 தலைவர் முடிவுரை

,, 8-00 நன்றியுரை

,, 8-30 | ,, 10-00 | — இடைவேளை

,, 10-00 - 'சுமை தாங்கி' நாடகம் : புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

★

எம். எஸ். மணி,
எஸ். முத்து,
செயலாளர்கள்.

அ. பெ. தருமலிங்கம்,
வரவேற்புக்குழுத் தலைவர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.